பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 25 புதன்கிழமை (07.05.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:163

பொதுசன நூலகம் நாவாந்துறைப் ... யாழ்ப்பாணம்

# நாடாளுமன்றை ஒரு மாதத்துக்கு இடைநிறுத்தினார் ஜனாதிபதி!

## பிரச்சினைக்குரிய நிலையியல் குழுக்கள் காலாவதி!!

கொழும்பு, மே 07

நாடாளுமன்றத்தின் அமர்வுகளை இடைநிறுத்தி (PROROGUE) ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவு பிறப்பித்திருக்கின்றார்.

எதிர்வரும் ஜூன் 5ஆம் திகதி வரை நாடாளுமன்றம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அன்றைய தினம் ஜனாதிபதி தலைமையில் நாடாளுமன்றத்தின் புதிய அமர்வு ஆரம்பமாகும்.

நாடாளுமன்றை இடைநிறுத்தும் ஜனாதிபதியின் உத்தரவு நேற்று நள்ளிரவு நடைமுறைக்கு வரத்தக்கதாகப் பிறப்பிக்கப்பட்டது.

அரசினால் பிறப்பிக்கப்பட்டுள்ள அவசரகாலச் சட்டம் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு ஒழுங்கு விதிகள் என்பனவற்றை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் பிரேரணை நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதன்படி, தற்போதைய அவசரகாலச்சட்ட விதிகள் எதிர்வரும் ஜூன் 6ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும்.

அத்திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அச்சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படாவிட்டால் அச் சட்டம் காலாவதியாகிவிடும்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஒரு தீவிர யுத்தத்தை ஆரம்பித்திருக்கும் அரசுக்கு, அவசரகாலச் சட்டம் காலாவதியாவது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

ஆகவே, அடுத்த மாதம் 6ஆம் திகதிக்கு முன்னர் அவசர காலச் சட்ட நீடிப்புப் பிரேரணையை மீண்டும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு வசதியாகவே 5ஆம் திகதி வரை மட்டும் - ஒரு மாதத்துக்கு - நாடாளுமன்றத்தை ஜனாதிபதி இடைநிறுத்தினார் என்று அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

தற்போதைய ஏற்பாடுகளின்படி, ஜூன் 5ஆம் திகதி நாடாளுமன்றம் மீண்டும் கூடிய பின்னர் அவசரகால்ச் சட்டத்தை நீடிக்க வசதியுள்ளது என்பது கவனிக்கத்தக்கது.

அரசமைப்பு ஏற்பாடுகளின் படி தமக்கு உள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, மேற்படி நாடாளுமன்றத்தை இடைநிறுத்தும் உத்தரவை (12ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் அரசை வீழ்த்துவதே தமிழரின் தீர்க்கமான முடிவு

## நாடாளுமன்றில் கூட்டமைப்பு அறிவிப்பு

கொழும்பு, மே 07

**கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ் மக்கள், அரசுக்கு எதிராக வாக்களிக்கத் தீர்மானித்து விட்டனர் என்றும் 10ஆம் திகதி அரசு கிழக்கில் படுதோல்வியடைப் போகின்றது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தது.**

**இத்தேர்தலில் அரசுக்கு எதிராக வாக்களிக்குமாறு தமது கட்சி விடுத்த வேண்டுகோளைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்றும் அக்கட்சி கூறியுள்ளது.**

அவசரக்காலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தியே இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, கிழக்கு மாகாண சபைக்கு உட்படும் மற்றைய இரு மாவட்டங்களான திருகோணமலையையும், அம்பாறையையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களான முறையே துரைட்ணசிங்கம், பத்மநாதன் ஆகியோரும் நேற்றுத் தமது நாடாளுமன்ற (12ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தினர் இருவர் திருமலையில் காயம்

திருகோணமலையின் தெற்குப் புறத்தே வவுணவில்லுவ, சித்தாலுப் பகுதியில் வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகள் எனக் கருதப்படும் சிறிய குழுவினருக்கும் இடையில் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்ற மோதலில் இரு இராணுவத்தினர் படுகாயமடைந்தனர் என்று படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இம் மோதலில் அக்குழுவிற்கு பலத்த சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்றும் படைத் தரப்பில் மேலும் கூறப்பட்டது.

(சி)

## ஜே.வி.பி. பிரசார அணியினரை பிள்ளையான் குழு தாக்கியதாம்!

கொழும்பு, மே.07

அம்பாறை மாவட்டம் திருக்கோயில் பகுதியில் கடந்த திங்கட்கிழமையன்று (நேற்று முன்தினம்) வீடு வீடாகச் சென்று தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த ஜே.வி.பியினர் மீது பிள்ளையான் குழுவைச் சேர்ந்த பதினைந்துக்கும் மேற்பட்டவர்கள் தாக்குதல் மேற்கொண்டனர் என்று ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் நிஹால் கலப்பதி தெரிவித்திருக்கின்றார்.

இத்தாக்குதலில் காயங்களுக்கு உள்ளான ஜே.வி.பி.ஆதரவாளர்கள் சிலர் அம்பாறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் கூறப்பட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கான அரிசி விநியோகம் மியான்மார் சூறாவளியால் பாதிப்பு

கொழும்பு, மே 07

மியன்மாரில் பாரிய அழிவை ஏற்படுத்தியுள்ள இயற்கை அனர்த்தம் காரணமாக இலங்கைக்கான அதன் அரிசி விநியோகம் பாதிக்கப்படலாம் என உலக உணவு ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கும், பங்களாதேஷிற்கும் ஆயிரக்கணக்கான தொன் அரிசியை வழங்குவதென்ற உறுதிமொழியைத் தற்போதைய சூழ்நிலையில் மியன்மாரினால் நிறைவேற்ற முடியுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக உலக உணவுத் திட்டப் பேச்சாளர் போல் ரிஸ்லே தெரிவித்துள்ளார்.

மியன்மாரினால் அரிசியை வழங்க முடியாவிட்டால், இந்த இரு நாடுகளிலும் உணவு விநியோகத்துக்கு ஏற்படக்கூடிய பாரிய பாதிப்புக் குறித்துப் பெரும் கவலை எழுந்துள்ள

(12ஆம் பக்கம் பார்க்க)

## மாந்தை கிழக்கில் ஷெல் வீச்சு

கொழும்பு, மே 07

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு சிறாட்டிக்குளம் கிராம மக்கள் குடியிருப்புகள் மீது நேற்று படையினர் ஷெல் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இதனால் அப்பகுதியில் 50க்கும் அதிகமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பகுதியில் பனங்காமம், கொம்புவைத்தகுளம் ஆகிய கிராமங்களுக்குத் தெற்காக சிறாட்டிக்குளம் உள்ளது.

மன்னார் பகுதியில் இருந்து அக்கிராமத்தின் மீது படையினர் எறிகணைத் தாக்குதலை நடத்தியுள்ளனர் என இணையத் தளத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பிலியந்தலக் குண்டு வெடிப்பில் சிங்களவருக்கும் தொடர்பு!

### நாடாளுமன்றில் பிரதமர் நேற்றுத் தகவல்

கொழும்பு, மே 07

கடந்த மாதம் 25ஆம் திகதியன்று பிலியந்தல பஸ் நிலையத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் சிங்களவர்களுக்கும் தொடர்பு உண்டு என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

பலதரப்பட்டவர்கள் புலிகளுக்கு உதவி வருகின்றனர்.

பிலியந்தலை பஸ் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் கூட சிங்களவர்கள் தொடர்பட்டிருக்கின்றனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பாக விசாரணைகள் நடைபெறுகின்றன.

இதன் காரணமாக புலிப் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்ட பல்வேறு வகையான போராட்டங்களை - சர்வதேச மட்டத்திலும் கூட - முன்னெடுக்கவேண்டிய கட்டாயம் எமக்கேற்பட்டுள்ளது.

இவ்வாறு பிரதமர் ரட்ணசிறி விக்கிரம

(12ஆம் பக்கம் பார்க்க)

## புளொட் உறுப்பினர் வவுனியாவில் சுட்டுக்கொலை!

வவுனியா, மே 7

வவுனியா பூந்தோட்டப் பகுதியில் நேற்று மாலை 5.30 மணியளவில் புளொட் உறுப்பினர் எனக் கருதப்படும் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கின்றார். சம்பவத்தில் மற்றும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

செல்வராஜா பவான் என்பவரே கொலையுண்டவரராவார். இச் சம்பவம் தொடர்பில் பூந்தோட்டப் பொலி ஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(சி)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலி. மேற்கில் இடம்பெயர்ந்தோருக்கு நேர்முகத் தேர்வு

சங்கானை, மே 7

வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து வலி. மேற்கு பிரதேச செயலர் பிரிவிற்குள் தற்காலிகமாக வசிப்பவர்களில் மீளக் குடியேற்றும் சம்பந்தமான நேர்முகத்தேர்வுக்கு இதுவரை சமுகமளிக்காதவர்கள், நேரடியாக வலி. மேற்கு பிரதேச செயலகத்திற்குச் சமுகமளிக்கு மாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (1-29)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம், கலட்டியைச் சேர்ந்த எமது நண்பன்
**இராமலிங்கம் இராஜேஸ்வரன்**
அவர்களின் அன்புத் தந்தை
**நாகர் இராமலிங்கம்**
அவர்கள் சிவபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிராத்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
யாழ்ப்பாணம், கொழும்பு (73903) நண்பர்கள் 2002 A/L.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சுப்பிரமணியம் அன்னரத்தினம்

(கல்வாரி பூரண சுவிஷேச தேவாலய அங்கத்தவர்)



கேணியடி, கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் அன்னரத்தினம் 04.05.2008 ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (07.05.2008) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி கல்வாரி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி, கொக்குவில். (73900) தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி நாகரட்ணம் தேவானந்தர்

திருமதி நாகரட்ணம் தேவானந்தர் கடந்த 02.05.2008 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கொல்லங்கலட்டியைச் சேர்ந்த யோகவனம் தேவானந்தர் (பிரதம அதிகாரி, நில அளவையாளர் திணைக்களம், கொழும்பு) அவர்களின் மனைவியும், சுழிபுரம் மத்தி - கோலாலம்பூர் காலஞ்சென்ற திரு. திருமதி வடிவேலு தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற தில்லையாச்சியின் (சுழிபுரம் மத்தி) மருமகளும், விஜயலக்ஷிமி சண்முகலிங்கத்தின் அன்புச் சகோதரியும், மீரா, யோகா, காலஞ்சென்ற கலா, காலஞ்சென்ற குகன் ஆகியோரின் பாசமிகு தாயும், மனோகரனின் (நிதித்துறை பணிப்பாளர்), டாக்டர். தவலிங்கம் (சிரேஷ்ட பகுப்பாய்வாளர்) ஆகியோரின் மாமியாரும், சிவாகினி, நாகேஸ்வரலிங்கம் (நிதி கட்டுப்பாட்டாளர்) ஆகியோரின் அண்ணியும், ஹரிகரன், பிரிந்தா, கோபேஸ், பிரணவி மற்றும் கஸ்தூரி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 11.05.2008 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை NW7 INB, UK லண்டனிலுள்ள ஹெண்டன் மயானத்தில் இந்து முறைப்படி மு.ப. 10 மணிக்கும் பிற்பகல் ஒரு மணிக்கு மிடையில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:-
**தேவானந்தர்** - + 44 208 864 4595
**மீரா - மனோகரன்** - + 44 770 103 1511
**யோகா - தவலிங்கம்** - 44 774 388 6732
**சிவாசினி - நாகேஸ்வரலிங்கம்** - 44 790 016 5095

### அம்பலவாணர் சிவபாதசுந்தரம்



மயிலிட்டி வடக்கு, கொல்லங்கலட்டி ஆகிய இடங்களை நிரந்தர வசிப்பிடமாகவும் மின்மாற்றி ஒழுங்கை, உடுவில் தெற்கை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட அம்பலவாணர் சிவபாதசுந்தரம் 04.05.2008 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், மரகதவல்லி, கணேசன் (கட்டட படவரைஞர், மத்திய பொறியியல் கூட்டுஸ்தாபனம், கொழும்பு), சண்முகானந்தன் (கிராம சேவையாளர், பிரதேச செயலகம், உடுவில்) திருமதி விஜயலட்சுமி சந்திரபாலன் (லண்டன்), சதானந்தன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வராசா, விமலநாயகி (ஆசிரியை, சைவ மங்கையர் கழகம், கொழும்பு), மோகனரஞ்சி (ஆசிரியை, அருணோதயக் கல்லூரி, அளவெட்டி), சந்திரபாலன் (லண்டன்), ஸ்ரெலா அருள்மொழி (நோர்வே) ஆகியோரின் மாமனும், தர்சன் (மாணவன், விஞ்ஞானபீடம், 2ஆம் வருடம், யாழ். பல்கலைக்கழகம்), அனுசா (மாணவி, பொறியியல் பீடம், 3ஆம் வருடம், மொறட்டுவ), ஜங்கரன் (மாணவன், கொழும்பு இந்துக் கல்லூரி), சந்தோஷன் (மாணவன், ஆண்டு 9, யாழ். இந்துக் கல்லூரி), சஞ்சீவன், றொசானி, கௌசிகன், நிவேதன், ஜோதி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.05.2008) வியாழக்கிழமை பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிப்பிலி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.சண்முகானந்தன்
(மகன்-கிராமசேவையாளர், பிரதேச செயலகம், உடுவில்)
0602212709, 0212226337.

மின்மாற்றி ஒழுங்கை,
உடுவில் தெற்கு,
சுன்னாகம். (சி-552741)

## பாடசாலை மாணவர்களுக்கான உணவு விநியோகம்

யாழ்ப்பாணம், மே 7

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கான உணவு வழங்கும் செயற்றிட்டத்தின் கீழ் இரண்டாம் தவணைக்கான உணவு விநியோகத்திற்கு ப.நோ.கூ. சங்கங்களுக்கு ஏற்கனவே வழங்கற் கட்டளைகள் வழங்கப்பட்டு, உடன் உணவு விநியோகத்தினை ஆரம்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சில ப.நோ.கூ. சங்கங்கள் இதுவரை விநியோகத்தை மேற்கொள்ளவில்லை எனத் தகவல் கிடைத்துள்ளது என்றும்- அந்தச் சங்கங்கள் எதிர்வரும் 9ஆம் திகதிக்கு முன் விநியோகத்தை பூர்த்தி செய்ய வேண்டும் என்றும் - செயலக திட்டப் பணிப்பாளர் ம. பிரதீபன் கேட்டுள்ளார்.

உணவுப் பொருள்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன் கிடைக்காவிட்டால் பாடசாலை அதிபர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக தமக்கு அறிவிக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (1)

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA
PHYSICS - 2010
பௌதிகவியல்
MON, WED - (6.15-7.30) A.M

## தாயகம் சிறுவர் இல்லம்

முழுநேர காவலாளி தேவை.

தொடர்பு : இல. 14, கொனிக்கா லாப், யாழ்ப்பாணம்.

### சுகாதார ஆசிரியர் தேவை

எமது நிறுவனத்தில் தரம் 6 முதல் 9 வரை கற்பிப்பதற்கு சுகாதார ஆசிரியர் தேவை. கற்பித்தல் அனுபவம் உள்ளவர்கள் நாளை (08.05.2008) வியாழன் 4.00 – 5.00 மணிக்கு நேரில் தொடர்பு கொள்ளவும்.

**BARATHY** சித்தன்கேணி.

### சாரதி தேவை

மத ஸ்தாபனம் ஒன்றிற்கு கார், பஸ் செலுத்த அனுபவமுள்ள சாரதி தேவை. 50 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் அவசியம். சம்பளம் பேசித் தீர்மானம் செய்யப்படும். தொடர்பு:
விளம்பர இல 3089, மே/பா உதயன்

### நன்றியுடன் பாராட்டுகின்றோம்

எமது நவன்புரி நிலையத்தின் வீடுகளுக்கு மீள் புனரமைப்பு வேலைகளுக்கென நிதி ஒதுக்கீடு செய்து, எமது வாழ்விடங்களை புதுப்பொலிவுடன் மிளிரச்செய்த கரித்தாஸ் – கியூடெக் நிறுவனத்திற்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நிர்வாகிகள், பொதுமக்கள்,
பாரதியார் நலன்புரி நிலையம்,
யோகபுரம், உரும்பிராய்.

### காணி விற்பனைக்கு

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் கிழக்கு எல்லையில் பாடசாலை, இருபாலைச் சந்தி என்பவற்றுக்கு மிக அண்மையில் அத்திவாரம், கிணறு உட்பட 1 1/2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 060-221-7888
No.56, செருக்கப்புலம் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (73907)

### 'கோப் சிற்றி' திறப்பு விழா

வலி. தென்மேற்கு, மே 7

மானிப்பாய் ப.நோ.கூ. சங்கத்தினால் நிறுவப்பட்ட கோப் சிற்றி விற்பனை நிலையத்தின் திறப்பு விழா நாளைமறுதினம் முற்பகல் 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ. சிவலிங்கம் ...

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை முன்னாள் ஆசிரியரும் சில்லாலை றோ.க.த.க. பாடசாலை ஆசிரியரும் வலிகாமம் கல்வி வலய புவியியல், வரலாற்று, குடியுரிமை வளவாளருமான
**சிவஞானசுந்தரம் ரமேஷ்குமார்**
அவர்கள் அகால மரணமடைந்தசெய்திகேட்டு அதிர்ச்சியுறுகின்றோம். அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவினால் துயருறும் : யா/ஏழாலை மகா வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

## இதயம் நெகிழ்ந்த கண்ணீர் காணிக்கை

### அமரர் ஆறுமுகம் அழகராசா

(சம்மாட்டியார்)



நெஞ்சம் பொறுக்குதில்லையே
ஐயா உன்முகம் பார்க்க உயிரும் பறக்குதே
பார்த்துச் சிரித்தமுகம்
பழக்கத்தில் உயர்ந்த குணம்கொண்டு
விரைவில் பிரிந்துவிட்டாய்

நாகர்கோயில் வடக்கைப் பிறப்பிடமாகவும் சென்னையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சமூக சேவையாளன் பிரபல சம்மாட்டியார் ஆறுமுகம் அழகராஜா கடந்த 2 ஆம் திகதி சிவபத மடைந்த செய்திகேட்டு அதிர்ச்சியுற்றோம். அவரின் மறைவையொட்டி எமது கண்ணீர்க் காணிக்கைகளை சமர்ப்பிக்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த துயரங்களையும் அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மை. ஆனந்தராசா,
பெரியாழ்வார் ஆச்சிரமம்,
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில், வடமராட்சி.

## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலய ஆசிரியை
**செல்வி கல்யாணி பாக்கியநாதன்**
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி கமலாதேவி பாக்கியநாதன்**
அவர்கள் கடந்த 01.05.2008 இல் காலமானதையொட்டி அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மசாந்திக் கும் பிரார்த்திக்கின்றோம்.

யா/வரணி மகாவித்தியாலயம், வரணி. (73907) **பாடசாலை சமூகம்.**

## மரண அறிவித்தல்

### கந்தையா சோமசுந்தரம்

காரைநகர், பலகாட்டைப் பிறப்பிடமாகவும் பண்டாரிக்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சோமசுந்தரம் நேற்றுமுன்தினம் (05.05.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லத்துரை - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் பவளமலரின் அன்புக் கணவரும் சந்திரகலா (வவுனியா), சுசிலா (வவுனியா), வரதரூபன் (மணியம் அன் கோ, வவுனியா), சிவமாலா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தகப்பனும் காலஞ்சென்ற செல்லம்மா, அன்னம்மா, கனகம்மா, தங்கரத்தினம் (காரைநகர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கனகலிங்கம் (வவுனியா), சற்குணராசா (பிரான்ஸ்), சிவமணி (வவுனியா), சிவலிங்கம் (நோர்வே), விஜயஆனந்தன் (சுவிஸ்), டேபி (கொச்சிக் கடை) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (06.05.2008) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் பண்டாரிக்குளம் இந்துமயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பலகாடு,
காரைநகர். (73902) தகவல்: தங்கரத்தினம் (சகோதரி).

JAFFNA COLLEGE CEYLON

# AAT - SRI LANKA
## Foundation Level

2010 இல் பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். G.C.E. (O/L) சித்தியடைந்த மாணவர்கள் இக்கற்கை நெறிக்கு தோற்றமுடியும்.

**Exam - December 2008**

வகுப்புக்கள் – வார நாள்கள் பிற்பகல் 3.00 – 5.00 வரை
மொழி மூலம் : ஆங்கிலம் / தமிழ்
பாடசாலை அதிபர்கள் ஊடாக விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும்.
இவ்விண்ணப்ப முடிவுத் திகதி : 19.05.2008
யாழ்ப்பாணக் கல்லூரி இவ்வரிய சந்தர்ப்பத்தை இப்பிரதேச மாணவர்களுக்கு அறிவிக்கின்றது.
தொடர்பு: அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பதினைந்தாவது வருடாந்த மாநாடு

## இன்று தொடக்கம் 3 நாள்களுக்கு

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 15ஆவது வருடாந்த மாநாடு இன்று புதன் கிழமை ஆரம்பித்து தொடர்ச்சியாக மூன்று நாள்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற இருக்கின்றது.

இம்மூன்று நாள்களிலும் பல்வேறு விதமான விஞ்ஞான நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. வட மாகாண மக்களினது விஞ்ஞான தொழிநுட்ப அறிவையும் ஆற்றலையும் மேம்படுத்துவதனை குறிக்கோளாக கொண்டு ஒவ்வொரு வருடமும் வருடாந்த மாநாடு கொண்டாடப்படுகின்றது. இவ் வருடம் 15ஆவது வருடாந்த மாநாடாக அமைகிறது.

மாநாட்டின் ஆரம்ப நிகழ்வாக யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் தலைவர், பேராசிரியர் க.கந்தசாமியின் தலைமையின் கீழ் மங்கள விளக்கேற்றலும் அதனைத் தொடர்ந்தும் பிரதம விருந்தினரைக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறும். இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்திய கலாநிதி அ.கேதீஸ்வரன் கௌரவிக்கப்படுகின்றார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர் உரையினை "யாழ்ப்பாண மாவட்டத்தில் சுகாதார சேவைகளிலுள்ள சவால்கள்" என்னும் கருப்பொருளில் ஆற்றவுள்ளார்.

### கருத்தாக்கச் செயலமர்வு

இரண்டாவது அமர்வாக காலை 9.45 மணிக்கு வைத்திய கலாநிதி ந.சிவராஜா தலைமையில் கருத்தாக்கச் செயலமர்வு நடை பெறும்.

இச்செயலமர்வின் கருப்பெருளாக "குழந்தைப் பருவத்தின் தேவைகள் (Childhood needs)" எனும் விடயம் சார்ந்து நான்கு துறை சார் வல்லுநர்கள் தமக்கென தனித்துவமான இணை கருப்பொருளை மையமாக வைத்து கலந்துரையாடவுள்ளனர்.

இதில் "உளவியல் தேவைகள் (Psychological needs)" எனும் விடயத்தில யாழ். போதனா வைத்தியசாலையில் உளவியல் ஆலோசகர் சா.சிவயோகனும் "பௌதீக தேவைகள் (Physical needs)" என்னும் விடயத்தில் குழந்தை மருத்துவ ஆலோசகர் வைத்தியகலாநிதி க.அருள்மொழியும் "நோய்த்தடுப்புத் தேவைகள் (Preventive need)" என்னும் விடயத்தில் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி சி.எஸ்.யமுனாநந்தாவும் "கல்விக்கான தேவைகள் (Educational needs)" எனும் விடயத்தில் கல்வியியற் கல்லூரியின் துணைமுதல்வர் பா. தனபாலனும் கலந்துரையாட உள்ளனர்.

### அனைவரும் கலந்துகொள்ளலாம்

குழந்தைப் பருவத்திலுள்ள பிரச்சினைகளை மையமாக வைத்து நடைபெறுகிற இக்கருத்தாக்கச் செயலமர்வில் அனைவரும் பங்குபற்றிப் பயன்பெறலாம் என்று அறிவிக்கப்படுகின்றது.

03ஆவது அமர்வில் இச்சங்கத்தின் இரு பிரிவுகளின் தலைவர்களின் உரை இடம் பெறும். இந்த அமர்வின் தலைவராக கலாநிதி ஆர்.விக்னேஸ்வரன் கலந்து சிறப்பிப்பார். பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்த அமர்வில் விஞ்ஞான சங்கத்தின் பிரயோக விஞ்ஞான பிரிவின் தலைவர் கலாநிதி ச.இளங்குமரன் "பிரயோக ஆய்வில் பயன்படும் அதிசிறந்த மாதிரியின் அளவு (Optional Sample size in applied research)" எனும் தலைப்பிலும் 02.15 மணிக்கு சமூக விஞ்ஞான பிரிவின் தலைவர் கலாநிதி த.கலாமணி "பாடசாலை கணிதவியலில் பிரச்சினைக்கு தீர்வு காணும் உத்திகள் (Use of problem solving strategies in school mathematics)" பற்றி உரையாற்றுவார்கள்.

இதனைத் தொடர்ந்து பிற்பகல் 03.15 மணிக்கு நான்காவது அமர்வு ஆரம்பிக்கும். இந்த அமர்வில் ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களினால் சமர்ப்பிக்கப்படும். மொத்தமாக அறுபத்து ஒன்பது (69) ஆய்வு கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படும். இதில் தூய விஞ்ஞானத்தில் 25, பிரயோக விஞ்ஞானத்தில் 34, மருத்துவ விஞ்ஞானத்தில் 05, சமூக விஞ்ஞானத்தில் 05 உள்ளடங்கும்.

### இரண்டாவது நாளான வியாழக்கிழமையன்று

இரண்டாவது நாள் (08.05.2008) அன்று 05ஆவது அமர்வு காலை 8.45 மணிக்கு ஆரம்பமாகும். இந்த அமர்வில் கலாநிதி நோபிள் சுரேந்திரன் "இலங்கையில் காவி மூலமாக பரவும் புதிய நோயான லெஷ்மேனியாசிசு (Leishmaniasis)" பற்றியும் 9.30 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்திய ஆலோசகர் வைத்திய கலாநிதி ஏ.சிறிதரன் "இளஞ் சமுதாயமும் கருத்தடுப்பு வழிகளும் (Contraception for young people)" எனும் தலைப்பில் உரையாற்றுவர்.

அன்று மு.ப 10.30 மணிக்கு ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிக்கும் நிகழ்வு தொடரும். பிற்பகல் 3 மணிக்கு ஆறாவது செயலமர்வு ஆரம்பமாகும். இந்நிகழ்வின் தலைவராக பேராசிரியர் இ.குமாரவடிவேல் கலந்து சிறப்பிப்பார்.

இந்நிகழ்வில் தூய விஞ்ஞான பிரிவின் தலைவர் கலாநிதி பி.ரவிராஜன் "பௌதிகவியலில் குறுந்தொழில்நுட்பம் (Nano Technology in Physics)" எனும் தலைப்பிலும் தொடர்ந்து பி.ப 3.45 மணிக்கு கலாநிதி கே. ரகுநாதன் மீளாய்வு உரையாக 'Federalism' என்னும் தலைப்பில் உரை நிகழ்த்துவார்.

### மூன்றாவது நாளான வெள்ளியன்று

மூன்றாம் நாள் நிகழ்வில் 07ஆவது அமர்வு நடைபெறும். இந்த அமர்வின் தலைவராக பேராசிரியர் வசந்தி அரசரெட்ணம் கலந்து சிறப்பிப்பார். மு.ப 9 மணிக்கு நூலக கேட்போர் கூடத்தில் ஆரம்பிக்கும் இந்நிகழ்வில் வைத்திய கலாநிதி கே.சிவபாலன் "நன்றாக தூங்கு (Sleep Well)" எனும் கருப்பொருளிலும் மு.ப 9.45 மணிக்கு முன்னாள் ஆயுள்வேத மாகாண பணிப்பாளர் வைத்திய கலாநிதி ப.உரோமகேஸ்வரன் "மூலிகை மருத்துவத்தின் தேவை (The necessity for herbal treatment)" பற்றி பிரசித்தி உரை நிகழ்த்துவார். இதில் அனைவரும் பங்குபற்றலாம்.

தொடர்ந்து மு.ப .10.45 மணிக்கு 8ஆவது அமர்வான விஞ்ஞான பிரிவுகளின் கூட்டங்களும் வருடாந்த பொதுக்கூட்டமும் நடைபெறும்.

பிற்பகல் 02.45 மணிக்கு பேராசிரியர் க.கந்தசாமி தலைமையில் விஞ்ஞான சங்கத்தின் புதிய தலைவரான சிரேஷ்ட பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் "போசாக்கும் நாள்பட்ட நோய்களும் (Nutrition and Chronic diseases)" எனும் தலைப்பில் தலைமை உரையை நிகழ்த்துவார். இந் நிகழ்வுகளுடன் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் வருடாந்த மாநாட்டு நிகழ்வுகள் நிறைவு பெறும்.

இந்நிகழ்வுகளில் அனைத்திலும் இச் சங்கத்தின் உறுப்பினர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் கலந்துகொண்டு பயன்பெறுமாறு யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பொதுச் செயலாளர் கலாநிதி கு.மிகுந்தன் கேட்டுள்ளார். (அ)

## பண்ணிசைப் போட்டி

யாழ்ப்பாணம்,மே7

இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் ஆலய திருநெறிய தமிழ் மறைக் கழகம் ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு மாணவர்களிடையே நடத்திவரும் பண்ணிசை மனனப்போட்டி எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

ஆரம்பப்பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு, அதிமேற்பிரிவு ஆகிய பிரிவுகளில் போட்டிகளில் நடத்தப்படவுள்ளன. (203)

## எந்திரவியல் விஞ்ஞான டிப்ளோமா பயிற்சி

யாழ்ப்பாணம்,மே7

கட்டுநாயக்காவில் உள்ள எந்திர தொழில்நுட்பவியல் நிறுவகத்தில் தேசிய எந்திரவியல் விஞ்ஞான டிப்ளோமா பயிற்சி நெறிக்கு பயிலுநர்களைச் சேர்ப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை இந்த விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞான, எந்திரவியல் பாடங்களில் சித்தியடைந்த 18 - 25 வயதுக்கு இடைப்பட்டவர்கள் அடுத்த மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 25.04.2008 ஆம் திகதிய வர்த்தகமானியிலோ அல்லது www.iet.edu.lk என்ற இணையத் தளத்திலோ பார்வையிடலாம். (202)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## வளர்ப்பு பெண் நாய்களுக்கு கருத்தடை தடுப்பூசி

சுதுமலை தெற்கு, யுவசக்தி சனசமூக நிலையத்தில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வளர்ப்பு பெண் நாய்களுக்குக் கருத்தடை தடுப்பூசி இலவசமாக ஏற்றப்படவுள்ளது.

இதற்கான பதிவுகளை சனசமூக நிலையத்தில் மேற்கொள்ளுமாறு நிலையத் தலைவர் தெரிவித்துள்ளார். (203)

## 'சாயி மார்க்கம்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,மே7

இலங்கை சத்திய சாயி சேவா நிறுவனம் சாயி மார்க்கம் எனும் நூலை வெளியிட்டுள்ளது.

ஜனவரி - ஏப்ரல் மாத இளைஞர்களின் விசேட மலராக இது வெளிவந்துள்ளது.

அகிம்சை, சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை ஆகிய அம்சங்களை உள்ளடக்கிய 23 கட்டுரைகளுடன் இது வெளியாகியுள்ளது.

இதன் ஆசிரியரான வைத்திய கலாநிதி இ.கணேசமூர்த்தியும் துணை ஆசிரியராக எஸ்.ஆர்.சரவணபவனும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (203-95)

## பிப்பிலி மயானத்திற்கு அபிவிருத்திச் சங்கம்

யாழ்ப்பாணம்,மே7

மானிப்பாய் பிப்பிலி இந்து மயான அபிவிருத்தி சங்கம் ஒன்று விரைவில் நிறுவப்படவுள்ளது.மானிப்பாய்வரியிறுப்பாளர் சங்க செயலாளர் த. தர்பாகரன் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

பிப்பிலி இந்துமாயான அபிவிருத்தி சங்கம் புனரமைக்கப்பட்ட பின்னர் நவீன வடிவில் பிப்பிலி மயானப் புனமைப்பு பணிகள் இடம்பெறும் என தலைவர் ந. விவேகானந்தராசா தெரிவித்தார். (203-95)

## யாழ்.மாவட்டத்தில்

## 391 மோட்டார் சைக்கிள்களின் உடைமைகள் கடந்த ஆண்டு மாற்றம் செய்யப்பட்டுள்ளன

### உரிய முறையில் பூரணப்படுத்தாத விண்ணப்பங்கள் தேக்கம்

யாழ்ப்பாணம்,மே7

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஆண்டு 391 மோட்டார் சைக்கிள்களுக்கான உடைமைகள் மாற்றம் செய்யப்பட்டு உரிய ஆவணங்கள் உரியவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, புதிய உடைமைகளுக்கென விண்ணப்பிக்கப்பட்ட 607 விண்ணப்பப் படிவங்களில் 216 விண்ணப்பங்கள் உரிய முறையில் பூர்த்திசெய்யப்படாத காரணத்தால் தேக்கமடைந்துள்ளன.

இத்தகவலை யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் வி.பத்மநாதன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட மோட்டார் திணைக்களத்தில் உடைமைகளைப் பெறுவதற்கென விண்ணப்பித்து அவை இதுவரை கிடைக்கப் பெறாதவர்களை தமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் மேலும் கூறியுள்ளார். (203-111)

## பேராசிரியர் சு.வித்தியானந்தனின் நினைவுக் கருத்தாடல் நிகழ்வுகள்

### யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் சமகாலத்தில்

யாழ்ப்பாணம்,மே7

ஈழத்தில் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் தமிழ்ப் பாரம்பரிய உயர்ச்சிக்கும் நாட்டார் வழக்கியல் விருத்திக்கும் அரும்பாடுபட்ட பேராசிரியர்சுப்பிரமணியம் வித்தியானந்தனின் 84ஆவது நினைவுக் கருத்தாடல் நிகழ்வுகள் நாளை வியாழக்கிழமை அவரது பிறந்த தினத்தில் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் சமகால நிகழ்வுகளாக இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா தலைமையில் யாழ்.பல்கலைக் கழகத்திலும் கொழும்பில் பேராசிரியர் சோ.சந்திரசேகரம் தலைமையில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்திலும் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாண நிகழ்வுகளை குழந்தை ம.சண்முகலிங்கம் தலைமையாகக் கொண்ட பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன் அறக்கட்டளையும் கொழும்பு நிகழ்வுகளை பேராசிரியர் சோ.சந்திரசேகரம் தலைமையாகக் கொண்ட பேராசிரியர் வித்தியானந்தன் நினைவுக் குழுவும் ஏற்பாடு செய்துள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் வாழ்த்துரை வழங்குவார்.

யாழ்.பல்கலைக்கழக கலாநிதி கலாமணியின் இசைநாடகம், "நேற்று - இன்று - நாளை" என்ற தலைப்பிலான நினைவுரை, யாழ்.பல்கலைக்கழக மாணவரின் "காத்தவராயன் கூத்து" என்பன இடம்பெறவுள்ளன.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெறும் நிகழ்வில் கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்விக்குப் பொறுப்பான பிரதம ஆணையாளர் கே.முகமட் தம்பி நினைவுரை நிகழ்த்தவுள்ளார். பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களின் "இலக்கியத் தென்றல்" எனும் நூல் மீள்பதிப்பாக வெளியிடப்படவுள்ளது. வெளியீட்டுரையை பேராசிரியர் சபா ஜெயராசா நிகழ்த்துவார். (203)



மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்தில் மனை முகாமைத்துவ கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் கே.இராசநாயகம் தலைமையில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தெல்லிப்பழைக் கல்விக்கோட்ட கல்விப்பணிப்பாளர் எஸ்.கைலாசநாதன் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் அதிபர், [illegible] ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்: நேசன்)

## பருத்தித்துறை நகரில் 'கோப்சிற்றி' திறப்பு

மந்திகை,மே7

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கூட்டுறவு நகர் (கோப்சிற்றி) விற்பனைக் கடையை பருத்தித்துறையில் திறந்து வைத்துள்ளது.

பருத்தித்துறை பஸ்நிலையக் குறுக்குத் தெருவிலேயே இக்கூட்டுறவு நகர் விற்பனைக் கடை திறந்துவைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபைத்தலைவர் சிவஸ்ரீ பீ. பத்மநாதக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழாவில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் இக்கூட்டுறவு நகர் விற்பனை நிலையத்தை சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்தார்.

பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் எஸ்.சிவனேசன் பொருள்களைக் கொள்வனவு செய்து விற்பனையை ஆரம்பித்து வைத்தார். இவ்விழாவிலே யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பீ.சிவலிங்கம், பருத்தித்துறை பிரதே செயலர் ஆர். வரதீஸ்வரன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



அகில இலங்கை கலை, இலக்கிய விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
நிகழ்வில் மேடையில் அரச அதிபர் உட்பட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் சங்கத் தலைவர் சொல்வேந்தன் பொன்.சுகந்தன் பேசுவதையும் முதலாவது படத்தில் காணலாம். பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன், எழுத்தாளர் செங்கையாழியான் ஆகியோர் உரையாற்றுவதை அடுத்த மூன்று படங்களிலும் காணலாம். நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினர் ஐந்தாவது படத்தில் .
(படங்கள்: சுந்தா)

# இன்னல்கள் நேர்ந்தாலும் சூழ்நிலைக்கு ஏற்ப எம்மை மாற்றிக்கொண்டு வாழப்பழகவேண்டும்

## கலை இலக்கிய சங்க ஆண்டுவிழாவில் அரச அதிபர்

மந்திகை,மே.7

இன்று தமிழ்மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். எந்த விதமான இன்னல்கள் நேர்ந்தாலும் சூழ்நிலைக் கேற்ப எம்மை மாற்றி வாழப்பழகிக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்.அரச அதிபர் கே.கணேஸ்.

இலங்கை கலை இலக்கிய சங்கத்தின் ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் துன்னாலை அல்லயம்பதி வடிவேலர் மணி மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றன.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

தமிழ் கலை, கலாசாரங்கள் பேணிப்பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்பட வேண்டும். இலங்கை கலை இலக்கிய சங்கம் போன்ற நிறுவனங்கள் தமிழை தமிழ்க்கலை கலாசாரங்களை பேணிப் பாதுகாத்து வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இது இன்றைய காலத்தின் முக்கிய தேவையாகும்.

தமிழ்மொழி தனிப்பெருஞ்சிறப்புப் பொருந்திய மொழியாகும். தமிழ் மொழிக்கு இலக்கியங்கள் மெருகூட்டிக் கொண்டிருக்கின்றன. இத்தகைய தமிழ் மொழியில் இலக்கியங்களை மேலும் வளர்ப்பதற்கு தமிழ் மக்கள் இணைந்து செயற்படவேண்டும். கலை இலக்கிய வாதிகள் இதில் முக்கிய கவனமெடுக்க வேண்டும்.

யாழ் மாவட்டத்திலே கலை, கலாசாரங்களை பேணி வளர்ப்பதற்கு யாழ். மாவட்ட கலாசார பேரவை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இப் பேரவையின் பொறுப்புக்களை மேலதிக அரச அதிபர் பொறுப்பேற்று மேற்கொண்டு வருகிறார். பிரதேச செயலாளர்கள் தலைமையில் பிரதேச கலாசார பேரவையும் செயற்பட்டு வருகின்றது. இவற்றின் வளர்ச்சிகளுக்குப் பிரதேச மக்களின் பங்களிப்பு மிக இன்றியமையாதது.

எமது கலை, இலக்கியங்கள் வளர்ச்சியடையும்போது எமது வாழ்வு வளம்பெறும். கலை இலக்கியவாதிகளின் பணிகளை நாம் ஊக்குவிக்க வேண்டும். அவர் களது வாழ்வு வளம் பெற இறையனுக்கிரகமும் கிடைக்க வேண்டும். இலங்கை கலை இலக்கிய சங்கததின் கலை இலக்கியப் பணிகள் சகல மாவட்டங்களிலும் எழுச்சி பெற வேண்டும் - என்றார்

இவ்விழாவில் கனடா, ஒட்டாவா பல்கலைக்கழக மாணவர் களின் நன்கொடை நிதி 50 ஆயிரம் ரூபாவை இனங் காணப்பட்ட நலிவுற்ற 10 மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக இலங்கை நாடாளுமன்ற ஓய்வுபெற்ற ஹன்சார்ட் அறிக்கையாளர் பொ.இராஜதுரை கையளித்தார்.

நாடகக் கலைஞர் அமரர் கந்தையா வடிவேலு ஞாபகார்த்தமாக இடம்பெற்ற சிறுகதைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, யாழ். இலக்கிய வட்டத் தலைவர் கலாநிதி க.குணராஜா பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன், கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், இலங்கை கலை இலக்கிய சங்க உப தலைவர் ரி.ரி.சண்முகநாதன் ஆகியோரும் உரையாற்றினர்.

(203-70-218)


## மரண அறிவித்தல்

### நாகர் இராமலிங்கம்

(ஓய்வுபெற்ற விற்பனை அதிகாரி, ROBIALAC கம்பனி)



மானிப்பாயை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், பிறவுண் வீதி, 5ஆம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் 05.05.2008 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகர் - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான சின்னத்துரை - சிரோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர், வலிகாமம் கல்வி வலயம்) அவர் களின் அன்புக் கணவரும் ரஜனி(யாழ்.போதனா வைத்தி யசாலை), ராஜினி (ஆசிரியை, யா/இராமநாதன் கல்லூரி), ரஜந்தினி (சுவிஸ்), சுகந்தினி(பகுதி நேர வழிகாட்டுநர், யாழ். பல்கலைக்கழகம்) ராமேஸ்வரன், ராஜேஸ்வரன் (தொழில்நுட்ப உத்தியோகஸ்தர், UNOPS) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரதிவிராஜ், சந்திரபோஸ் (சுவிஸ்), யோகராஜா (பஃறின்), ஆகியோரின் அன்பு மாமனாரும் நிஷான், சாருஜன், ஆரணி, சரோன் ஆகியோரின் அன்புப் பேரனும் அமரர் புவனேஸ்வரி, மற்றும் அருணகிரிநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஜெயசீலன் (லண்டன்), ஜெயவண்ணம் ஆகியோரின் பெரிய தந்தையும் தம்பிப்பிள்ளை (கனடா), மேரிறெஜினாசோதி, (கொழும்பு), புனிதவதி, காலஞ்சென்றவர்களான சண்முகம், பொன்னார், அன்னமுத்து, கார்த்திகேசு ஆகியோரின் அன்புச் சகோதரனும்ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.05.2008) புதன்கிழமை மாலை 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*5 ஆம்ஒழுங்கை,*
*பிறவுண் வீதி.*
*யாழ்ப்பாணம்.* (73906)

தகவல்:
குடும்பத்தினர்.

## மணமகள் தேவை

பரணி நட்சத்திரம், 1ஆம் பாதம், தனு இலக்கினம், கிரகபாவம் 46 உள்ள, 50 வயது நிரம்பிய கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த கோடீஸ்வர விஞ்ஞானிக்கு சதயம், திருவோணம், அனுஷம், மகம் நட்சத்திரங்களைச் சேர்ந்த 38 வயது முதல் 42 வயது வரையான கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த சுமாரான அழகுடைய மணமகள் தேவை. சீதனம், இனாம் எதிர்பார்க்கப்படமாட்டாது. விருப்பம் உடைய பெண்வீட்டார் 25.05.2008 இற்குள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

B.Krishnarasa
Savanai, Point Pedro (சி/552734)

## வீடு வாடகைக்கு

கைலாசபிள்ளையார் கோயில் சந்திக்கு அண்மையாக கோயில் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும்.

*தொடர்பு: சிவராசா சிவானந்தநாதன்,*
No.16/3, *விதானையார் வீதி,*
*சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.*
(73909) T.P.: 0776146434

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்
*19,முருகேசர் லேன், நல்லூர்.* (73841)

## வீடு விற்பனைக்கு

மட்டுவில் தெற்கு, நுணாவில் சந்தி, பருத்தித்துறை வீதியில் 5½ பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு; V. துரைரட்ணம்
T.P.No: 021 222 7785
060 221 4831 (73899)

## கட்டடம் விற்பனைக்கு

நகரின் மத்தியில் நாவலர் வீதியில் வியாபாரக் கட்டடத் தொகுதி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: S.Dishanthan
T.P.0779688006 (சி/552729)

## மாபெரும் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

இணுவில் இந்துக் கல்லூரியில்
இன்று தொடக்கம் மூன்று நாள்வரை
இடம்பெறவுள்ளன.

பூபாலசிங்கம் புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.
(சி/552735)

பசுமைப் புரட்சியாளரை
## மனதார வாழ்த்துகின்றோம்



இளவாலையூர்
### தி.வை.செகராஜசிங்கம்

நேற்று முன்தினம் (05.05.2008) யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் திரு.இரா.வசந்தசேனன் முன்னிலையில் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக (Justice of the Peace) சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். வலி.தென் மேற்கு பிரதேச ஓய்வூதிய சங்கத்தின் செயலாளராகவும் மானிப்பாய் சத்தியசாயி சேவா நிலையத்தின் தலைவராகவும் பணியாற்றிவரும் இவர் - ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபரான இவர் (Station Master) லண்டனில் A.M.I.T பட்டமும் பெற்றமும்மொழி தேர்ச்சியாளன் ஆவார். குடாநாட்டிற்கு மானிப்பாயில் இருந்து பயன்தரு மரக் கன்றுகளை பல ஆயிரக் கணக்கில் வழங்கி பசுமை ஏற்படுத்தி வரும் "பசுமைப் புரட்சியாளர்" (G.R) வை. செகராஜசிங்கம் அவர்களும் அவரது மனைவி திருமதி செ.இராஜேஸ்வரி அவர்களும் வாழ்ந்து சேவையாற்ற வேண்டும் என மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*ஹேமா இல்லம்,*
*புலவர் வீதி, நாவலி வடக்கு.* (சி/552720)

தலைவரும், நிர்வாகிகளும்
HSCMF - Navaly

தென்மராட்சி கிழக்கு
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து) கொடிகாமம்

## இலிகிதர் பதவி வெற்றிடம்

01. சம்பள அளவுத்திட்டம் 9450 -11000 (கூ.வே.ஆ.சுற்று நிரூபம் 75X10 - 80X10 66/2006இன்படி)
02. சம்பளக் குறியீட்டு இல. 302/15
03. வயது 18 தொடக்கம் 45 வரை (சங்கப்பணியாளருக்கு வயதெல்லை பொருந்தாது.)
04. விண்ணப்ப முடிவு திகதி : 17.05.2008
05. பிணை: தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் சங்கத்தால் கோரப்படும் காசுப்பிணையினை செலுத்துவதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.
06. 1) சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
    2) சங்கத்தில் ரூபா 20/= செலுத்திப் பெற்றுக் கொண்ட விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.
    3) கணனி அறிவும், திறனும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
    4) மேலதிக விவரங்களைச் சங்கப் பணிமனையில் அறிந்து கொள்ளலாம்.
07. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்
    (அ) கூட்டுறவுப் பணியாளர் 14ஆவது சம்பளத் திட்டத்தில் (108 : 81 சுற்று நிரூபத்திற்கமைய ) இலிகிதர் பதவியில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.
    (ஆ) க.பொ.த. சாதாரணத்தில் கணிதம் / வர்த்தக எண்கணிதம் / தமிழ்மொழி ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக 05 பாடங்களில் திறமைச் சித்திகளுடன், 06 பாடங்களில் சித்தியடைந்தவராக இருத்தல்வேண்டும்.
08. நிபந்தனைகள்
    (அ) நிறுவனங்களில் தற்போது கடமையாற்றுபவர்கள் நிறுவனத் தினூடாக சிபார்சு செய்து விண்ணப்பிக்கவேண்டும்.
    (ஆ) விண்ணப்பப் படிவத்துடன் கல்விச்சான்றிதழ், அனுபவச் சான் றிதழ், வதிவிடச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ் அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்களின் பிரதி என்பன இணைக்கப்பட வேண்டும். பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் சான்றிதழ்களும் நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவங்களை ஏற்கவோ, நிராகரிக் கவோ நெறியாளர் குழுவிற்கு உரிமை உண்டு.
09. விண்ணப்பப்படிவங்கள் யாவும் "பொதுமுகாமையாளர், தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம் (வ- து), கொடிகாமம்" என்ற முகவரிக்கு இலிகிதர் 302/15 பதவிக்கான விண்ணப்பம் எனக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் எழுதப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்,
கொடிகாமம். 06.05.2008 (சி/552727)

பொது முகாமையாளர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிமலை எவ்வாறு தோன்றுகின்றது



பூமியின் மேற்பரப்புக்குக் கீழே வெப்பம் அதிகரித்துக்கொண்டே செல்லும். சுமார் 20 மைல் தூரத்தில் பெரும் பாறைகளைக்கூட உருகச் செய்யும் அளவுக்கு வெப்பம் அதிகரித்துக் காணப்படும்.

பாறைகள் உருகும்போது அவை அகன்று பெரிதாகும். அப்போது அதற்கு அதிக இடம் தேவைப்படுகிறது. உலகின் சில பகுதிகளில் பார்த்தீர்களானால் மலைகள் உயர்த்தப்பட்டு விடுவதுண்டு. இவ்வாற மலைகள் மேல் உயர்த்தப்படும் போது கீழே அழுத்தம் குறைகின்றது. அதனால் உருகிய பாறைகளின் குழம்புத் தேக்கம் ஒன்று அங்கே ஏற்படுகின்றது. இதை மக்மா (Magma) என்று அழைப்பார்கள். உயர்த்தப்பட்ட மலைகளில் ஏற்படும் துவாரங்கள், வெடிப்புகள் வழியாக இக்குழம்பு வெளிப்படுகின்றது. ஆனால் தீக்குழம்பின் தேக்கத்தின் மீது உயர்த்தப்பட்ட மலை உச்சியைவிட அழுத்தம் அதிகரிக்கும் போது எரி மலையாக அது வெடித்து சிதறுகின்றது. அப்பொழுது வாயுக்கள் கலந்த நீர்ப்பொருள் அல்லது திடப்பொருள் கள் வெளியில் எறியப்படுகின்றன. இவ்வாறு வெளியேறும் பொருள் மலையின் உச்சி வாயிலைச் சுற்றி படிந்து விடுகின்றது. அதன் காரணமாக ஒரு கூம்பு (cone) வடிவான அமைப்பு அங்கே ஏற்பட்டு விடுகின்றது.

எரிமலையிலிருந்து வெளிப்படும் பொருள் பெரும்பாலும் வாயுக்களே. ஆனால் தணல் போன்ற குழம்பும் கெட்டியான பொருள்களும் சாம்பலும் வெளியில் எறியப்படுவதுண்டு. 'மக்மா' என்ற பொருள் வாயிலிவின் அருகே வரும்போது வெப்பமும் அழுத்தமும் குறைகின்றன. அதனால் 'மக்மா' வின் அமைப்பிலும் இரசாயனத் தன்மையிலும் மாற்றம் ஏற்பட்டு 'மக்மா' வானது 'லாவா' என்ற குழம்பு நிலையை அடை கின்றது. அதுவே கூம்பின் வழியாக மலையின் சரிவுகளில் வழிகின்றது.

1943 ஆம் ஆண்டு மெக்ஸிகோ நகரில் ஒரு கோதுமை வயலில் ஆச்சரியகரமான நிகழ்வு ஒன்றை அங்குள்ள மக்கள் கண்டார்கள். எரிமலை யொன்று உருவாகிக் கொண்டிருந்தது. மூன்று மாதத்தில் 300 மீற்றர் உயரமான கூம்பு ஒன்று தோன்றியது. இரண்டு நகரங்கள் அழிந்து போயின. தணல்களும் சாம்பலும் வழிந்து படிந்ததால் பெரும் அளவான நிலம் நாசமாகியது. *******

- ராம்.

# புதன் பொய்கை



## செடிகளும் அவைகளின் உணவுத் தயாரிப்பு முறையும்

செடிகளுக்கு எவ்வாறு உணவு கிடைக்கிறது? செடிகளில் "தொழிற்சாலைகள்" உண்டு. அவைதான் செடிகளின் இலைகள். பழமரங்களின் இலைகள் பழம் தயாரிப்புக்கான உணவைத் தயாரித்து வழங்குகின்றன. இதை காற்றிலிருந்தும் நிலத்திலிருந்தும் பெற்றுக் கொள்கின்றன. இதில் ஒரு பொருள் கார்பன்டை ஒக்சைடு ஆகும். இப்பொருளை மரங்கள் காற்றிலிருந்து கிரகித்துக்கொள்கின்றன. அடுத்தது, தண்ணீர்- நிலம் இதனை வழங்குகின்றது. இவ்விரண்டையும் கொண்டுமரம் சர்க்கரையைத் தயாரித்துக் கொள்கின்றது. இந்த உணவு தயாரிக்கும் முறையானது போட்டோசிந்தசிஸ் (Photosynthesis) என்று அழைக்கப்படுகிறது. பல மரங்களில் சர்க்கரை காணப்படுவதில்லை. ஏனென்றால் தயாரிக்கப் பட்டவுடனேயே அது அம்மரங்களின் சர்க்கரை மா பொருளாகவும் புரதமாகவும் மாற்றப்பட்டு விடுகின்றது. உணவு தொழிற்சாலைக்கு யந்திரங்கள் தேவையல்லவா? தொழிற்சாலையாகிய இலைகளில் பச்சை நிறமான மிகச் சிறிய பொருள்கள் உண்டு. இவைகள் குளோரொப்பிளாஸ்ட் என்று அழைக்கப்படும். இவைதான் யந்திரங்கள். இவைகளில் குளோரொபில் என்ற பச்சை நிறப்பொருள் இருக்கின்றது. இந்த யந்திரத்தை இயக்கும் எரிசக்தி என்ன தெரியுமா சூரிய வெளிச்சம்.

செடிகளின் வேர்கள் மண்ணிலிருந்துநீரை உறிஞ்சி எடுத்துக் கொள்கின்றன. இந்த நீரானது வேர்கள் வழியாக இலைகளுக்கு அதன் நரம்புகள் ஊடாகச் சென்றடைகின்றது. இந்த இலை நரம்புகள் இலையிலுள்ள கலங்களுக்கு நீரைக் கொண்டு செல்கின்றன. இங்குதான் உணவு தயாரிப்பு நடைபெறுகின்றது. இவ்வாறு தயாரிக்கப்படும் உணவானது இலைகள் பயன்படுத்தியவை போக நரம்புகள் (Veins) வழியாகக் களஞ்சியப்படுத்துவதற்காக வேர்கள்,பழங்கள் மற்றும் விதைகள் போன்ற இடங்களுக்குச் சென்றடைகின்றன. தேவையற்ற பொருள்களை வெளியேற்றும் வேலைகளை இலைகளே செய்கின்றன. இலைகளுக்குள் செல்லும் காற்றில் கார்பன்டயோக்சைட்டும் காணப்படும். சூரிய வெளிச்சம் இருக்கும் போது இதனை இலைகள் சர்க்கரை தயாரிக்கப் பயன்படுத்துகின்றன. மீதியான காற்று மேலதிக பிராணவாயுவுடன் (oxygen) இலைகளின் துளைகள் மூலம்-இவை இலைகளின் அடிப்பாகத்தில் காணப்படும்-வெளியேற்றப்படும். ★★★★★★★★★★★★★★ - உமா.

"பாதங்களைப் போல, கரங்களைப் போல,
கண் இமைகளைப் போல, பற்களின் மேல்கீழ்
வரிசைகள் போல, ஒருவருக்கொருவர் உதவி
செய்யவே நாம் இயற்கையில் படைக்கப்பட்டிருக்கிறோம்.
உடலின் வாழ்க்கை நதி போன்றது.
ஆன்மாவின் வாழ்க்கை பனி மூடிய கனவுபோன்றது.
உண்பது, அருந்துவது, உறங்குவது,
பாலுணர்வு போன்று வாழ்க்கையின் சகஜமான
ஒரு நிகழ்வுதான் மரணம் என்பதனை உணர்ந்து
மரண பயத்தை வெற்றி கொள்ளுங்கள்.
மரணம் இயற்கையானது, இயற்கையான
எதுவும் தீங்கு பயப்பதாகாது.".

இப்படிச் சொன்னவர் யார் தொரியுமா?
பத்தொன்பது ஆண்டு காலமாக
ரோம சாம்ராஜ்யத்தின் பேரரசராக
விளங்கிய மார்கஸ் ஆர்லியஸ் என்பவரே
அந்தப் பேரறிஞராவார்.
'மெடிரேஷன்ஸ்' (Meditations) என்ற
அவரது நூலில் இது போன்ற அரிய பல
தத்துவக் கருத்துக்களை அவர் உலகுக்குச்
சொல்லி வைத்துள்ளார்.

கே.சங்கரநாதன் , புற்றளை.




## ஹப்பி பேர்த்டே ரூ யூ....

உலகிலேயே அடிக்கடி பாடப்படுகிற பாடல்;
பாடி மில்ரன் மற்றும் ஹில் என்ற இரு
சகோதரிகளால் எழுதப்பட்ட பாடல்;
1793 ஆம் ஆண்டில் முதன்முதலாக
ஒலிக்கப்பட்ட பாடல்;
இத்தனை பெருமைகள் கொண்ட அந்தப் பாடல்;
ஹப்பி பேர்த்டே ரூ யூ........

## பி.ஏ.பட்டம் என்பதன் பொருள்தான் என்ன?

B.A. (இளமாணி) பட்டம் என்றால் என்ன? B.A. என்பதின் விரிவாக்கம் Bachelor of Arts , என்பதாகும். இதில் Bachelor என்பதன் கருத்து திருமணம் முடிக்காத ஆண் அல்லது பிரமச்சாரி. ஆனால் இந்தப் பிரமச்சாரி என்பதற்கும் பட்டத்திற்கும் எதுவித தொடர்பும் கிடையாது. Bachelor என்ற சொல்லுக்குப் பல்கலைப் பட்டத்துடன் எவ்வாறு தொடர்பு ஏற்பட்டது என்பது எவருக்கும் தெரிவதாய் இல்லை. ஒரு வேளை பிரமச்சாரிகள் மட்டும்தான் இந்தப்பட்டத்திற்காக படிக்கலாம் என்ற நியதி இருந்ததோ தெரியவில்லை. ஒரு மாணவர் கலாசாரம்-பண்பாடு தொடர்பான பாடங்களில் (அதாவது பொதுவாக கலைகள் என்று கூறப்படும் பாடங்கள்) பட்டம் பெறும் போது B.A. பட்டத்தைப் பெறுகின்றார். அதேபோல் அறிவுத்துறையில் (விஞ்ஞானம்) ஒரு மாணவர் திறமை பெறும்போது B.Sc.(Bachelor of Seience) பட்டம் பெறுகிறார். அநோகர் இத்துடன் நிற்பதில்லை பட்டப்பின் படிப்பையும் தொடர்வார்கள். அந்தவகையில் M.A மற்றும் M.Sc பட்டங்களை அவர்கள்பெறக்கூடும்.இதிலும் தொடர்ந்து படித்து ஆய்வுகள் செய்து Thesis என்று சொல்லப்படுகின்ற ஆய்வுக்கட்டுரைகளை எழுதி சமர்ப்பித்து Ph.D (Doctor of Philosophy) என்ற பட்டத்தைப் பெறுகிறார்கள். இதேபோல் ஏதாகிலும் துறைகளில் ஆய்வுகள் மற்றும் சாதனைகள் புரிந்து பாண்டித்தியத்தை நிரூபிப்பவர்களுக்கு அத்துறைக்கான பட்டம் வழங்கப்படுகின்றது. வைத்தியர்கள், சட்டவல்லுநர்கள் போன்றோர் தொழில்சார் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த பின் குறித்த பட்டங்களைப் பெறுகின்றனர். ஆனால் இவர்கள் தமக்குரிய பணிகளில் இணையும் முன்வேறு சோதனைகளையும் எதிர்கொள்ளவேண்டியிருக்கும்.



இக்காலத்தில் கல்வித்துறையானது விசேஷத்தன்மையைக் கொண்டதாகவள்ச்சியுற்றுள்ளது. கல்லூரிகளும், கல்வி நிறுவனங்களும், பல்கலைக்கழகங்களும்,விவசாயம்,வனத்துறை, மருந்துத்துறை, பல்வைத்தியம்,தாதியம், பொறியியல், கட்டடத்துறை, மற்றும் பல்வேறு தொழில் துறைகளில் படிப்புக்களையும் பட்டங்களையும் வழங்குகின்றன.

பட்டம் பெறுவது என்பது ஒரு சாதனைதான். ஆனால் அதனை வெறும் கௌரவத்துக்காக எவரும் பெற்றுக் கொள்வதில்லை. சில துறைகளில் பல்கலைக்கழகப் பட்டம் பெறாமல் தொழில்நடத்தவோ, தொழிலில் இணையவோ முடியாது. குறிப்பாக மருத்துவம் , சட்டம் போன்ற துறைகளைக் குறிப்பிடலாம். *********

- கலாஜோதி.

## கஸ்தூரிபாவைப் பற்றி காந்திஜி

அவளை எனக்கு மிகவும் பிரியமானவளாகச் செய்துவிட்டது,அவள் தன்னை மக்களின் சேவைக்காக அர்ப்பணித்துக் கொண்டதுதான். தானாகவே அவள் அந்தப் பணியில் ஈடுபட்டாள். நான் வற்புறுத்தவில்லை. அதுவே எனக்கு மிகவும் சந்தோஷத்தைக் கொடுத்தது. அவளுக்கு பிடிவாதம் அதிகம். தனக்கு இஷ்டமில்லாததை அவள் செய்யமாட்டாள். ஆனாலும் அவள் என்னை மனம் நோகச் செய்ததில்லை. 1901 இற்கு பின் நான் பிரமச்சாரியாகவே இருந்தேன். வேண்டுமானால் அவள் தனியே இருந்திருக்கலாம். ஆனால் என்னை விட்டுப்பிரிய அவள் விரும்பவில்லை. கடைசி வரை என்னுடனேயே இருக்க அனுமதிக்க வேண்டினாள்.

அவளுடைய கடைசி மூச்சு என் மடியில் பிரிந்தது. அவள் விருப்பம் நிறைவேறிவிட்டது. அவள் இல்லாத வாழ்க்கையை என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. பொறுத்துக் கொள்ளவும் இயலவில்லை. ஆனால் நான் இல்லாமல் அவளால் இருந்திருக்க முடியாது. அவள் எனக்கு முன் கடவுளிடம் போய்ச் சேர்ந்துவிடச் செய்தது அவருடைய கருணை என்றே நான் நினைக்கிறேன். ********************

## பெரியவன் ஆகும் வழி

சுவாமி ராமதீர்த்தர் கல்லூரிப் பேராசிரியராக இருந்த போது: மாணவர்களுக்கு ஒரு நாள் கற்பித்துக் கொண்டிருக்கையில் கரும்பலகையில் ஒரு கோடு வரைந்தார். ஒரு மாண வனை அழைத்து 'இந்தக் கோட்டைச் சிறிதாக்கு' என்று கூறினார்.

மாணவன் வேகமாக கரும்பலகையின் பக்கம் போனான். அவர் வரைந்திருந்த கோட்டின் நீளத்தை அழிக்க முனைந்தான். அதைக் கண்ட சுவாமிகள், 'மாணவனே நில்! நான் கோட்டைச் சிறிதாக்கச் சொன்னேனே தவிர, அதைச் சிதைத்து அழிக்கச் சொல்லவில்லையே என்றார். கோட்டை அழிக்கவும் கூடாது; அதைச் சிறிதாக்கவும் வேண்டும். இதை எப்படிச் சாதிப்பது?

மாணவர்கள் பலர் ஒன்றும் புரியாமல் திகைக்கையில் ஒரு மாணவன் எழுந்து கரும்பலகையின் பக்கம் வந்தான். அதில் வரைந்திருந்த கோட்டின் பக்கம் அதை விட நீளமான மற்றொரு கோட்டை வரைந்து விட்டுத் தன் இடத்தில் போய் அமர்ந்தான். அவனுடைய அறிவுக்கூர்மையை தமக்குள் மெச்சிக் கொண்டார், சுவாமி ராமதீர்த்தர். ஏனைய மாணவர்களைப் பார்த்து, 'இதோ பாருங்கள். இந்தக் கோடு நமக்கு என்ன அறிவிக்கிறது? வாழ்க்கையில் ஒருவன் பெரியவனாக விரும்பினால் அவன் மற்றவரை வதைக்கவோ அழிக்கவோ தேவையில்லை என்பதைத்தான்' என்றார். பெரியவனாக விரும்பு கிறவன் பெரிய காரியங்களைச் செய்தே மேல் நிலை அடைய வேண்டும்! என்று விளக்கினார். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகவியலாளருக்கு எதிராகவும் யுத்தம் நடத்துகிறது; அரசு மீது உள்ளூர், சர்வதேச அமைப்புகள் சீற்றம்

## கோத்தபாயவின் போக்குக் குறித்து கடும் அதிருப்தி

கொழும்பு, மே 7

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஊடகவியலாளர்கள் குறித்து வெளியிட்டுள்ள கருத்துகளுக்குக் கடும் கண்டனம் வெளியிட்டுள்ள சர்வதேச மற்றும் உள்ளூர் ஊடக அமைப்புகள், அரசு இவ்விவகாரம் குறித்துத் தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்த வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

கோத்தபாய ராஜபக்ஷ ஊடகவியலாளர்களைத் துரோகிகள் என வர்ணித்துள்ளமையுடன் கடுமையான செய்தித்தணிக்கையும் அவசியம் எனத் தெரிவித்திருந்த கருத்துகளுக்கே இவ்வாறான கடும் எதிர்ப்பு உருவாகியுள்ளது.

பாதுகாப்புச் செயலாளரின் அறிக்கைகளையும், பொதுநலன் அடிப்படையில் செய்தி வெளியிடும் பத்திரிகையாளர்களை பெயர் குறிப்பிட்டு அவமானப்படுத்தும் அரசின் செயற்பாடுகளையும் கண்டிப்பதாகச் சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனமும் சுதந்திர ஊடக இயக்கமும் தெரிவித்துள்ளன.

பாதுகாப்பு செயலாளரின் கருத்துக் குறித்து அரசும், ஜனாதிபதியும் தெளிவுபடுத்த வேண்டுமென சுதந்திர ஊடக இயக்கத்துடன் இணைந்து தானும் கோரிக்கை விடுப்பதாக சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

ஊடகப் பிரசுரம் குறித்த அனைத்து முறைப்பாடுகளும் பொருத்தமான மத்தியஸ்தர் குழுவினால் ஆராயப்பட வேண்டுமென்றும் சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

### உயிருக்கு ஆபத்து ஏற்படுத்த அரசுக்கு உரிமை இல்லை

பத்திரிகையாளர்களுக்கு எதிரான யுத்தத்தை நிறுத்துமாறு இலங்கை அரசிடம் சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுத்து வருவதை சுட்டிக்காட்டியுள்ள அதன் ஆசிய - பசுபிக்கிற்கான இயக்குநர் ஜக்குலின் பார்க், பத்திரிகையாளர்களின் கருத்துகளை அரசு நிராகரிக்கலாம், எனினும் வெறுப்புணர்வைத் தூண்டிப் பத்திரிகையாளர்களினதும் ஊடகப் பணியாளர்களினதும் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்த அதற்கு உரிமையில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கோத்தபாய ராஜபக்ஷ அவரது கருத்துகளுக்கும் அதனால் ஏற்படும் விளைவுகளுக்கும் பொறுப்பேற்க வேண்டும் என சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது.

பாதுகாப்புப் படையினர் மற்றும் இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிரான கருத்துகளை வெளியிடும் செய்தியாளர்களை ஊடகத் துரோகிகள் எனக் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார் எனவும் சுதந்திர ஊடக இயக்கம் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறான ஊடகங்கள் தடைசெய்யப்பட வேண்டுமென கோத்தபாய மேலும் வலியுறுத்தியுள்ளார் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வெளிப்படையாகச் செய்தித்தணிக்கைக்கு அரசு வேண்டுகோள் விடுக்கின்றது. அதிருப்தியாளர்கள் மற்றும் மாற்றுக் கருத்துடையோரை மௌனமாக்குகின்றது. - எனவும் சுதந்திர ஊடக இயக்கம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, பாதுகாப்பு ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் மீது பாதுகாப்பு அமைச்சு வெளிப்படையான விமர்சனத்தை முன்வைத்துள்ளமையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் கடந்த மூன்றாம் திகதி வெளியான கட்டுரையொன்று அத்தாஸ், படையினரை மனத்தளர்ச்சியடையச் செய்து, பயங்கரவாதத்தை ஊக்குவிக்கின்றார், பொதுமக்களுக்குப் பிழையான தகவல்களை வழங்குகின்றார் எனச் சாடியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

# கிழக்கில் 90% வாக்காளர் அட்டை விநியோகம்; சுமுக முறையில் நடைபெற்றது - தபால் மா அதிபர்

கொழும்பு, மே 7

கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டை விநியோகம் சுமுகமாக இடம்பெற்றுவருவதாக தபால் மா அதிபர் எம்.கே.பீ. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதுவரை 90 சத வீதமான வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் நடவடிக்கை பூர்த்தியடைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

1,70,000 வாக்காளர் அட்டைகள் இது வரை விநியோகிக்கப்படவில்லையென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கூறிய கருத்துக்குப் பதிலளிக்கையிலேயே தபால் மா அதிபர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எந்தவொரு தேர்தலின் போதும் சுமார் பத்து வீதமான வாக்காளர் அட்டைகளை விநியோகிக்க முடியாமல் போவது புதுமையல்ல.

இம்முறை கிழக்கு மாகாணசபைத் தேர்தலின் போது ஏனைய தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் வாக்காளர் அட்டை விநியோகம் சற்றுத் துரிதமாக இடம்பெற்றுள்ளது என்றே கூறவேண்டும்.

ஏப்ரல் 30 ஆம் திகதி வரை மிகவும் மந்தமாகவே இந்த விநியோக நடவடிக்கை இடம்பெற்ற போதிலும், மே மாதம் முதலாம், இரண்டாம் திகதி அளவில் வாக்காளர் அட்டை விநியோகம் மிகத் துரிதமாக இடம்பெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல பழைய அறிக்கையை கையில் வைத்திருக்கிறார் போலும்.

தபால் மா அதிபரின் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் விநியோகிக்கப்படாத வாக்காளர் அட்டைகள் அவ்வப்பகுதிப் பொதுத் தபால் நிலையங்களில் உள்ளன. இதுவரை வாக்காளர் அட்டை கிடைக்காதவர்கள் தேர்தல் இடம்பெறும் தினம் வரை தங்களுடைய அடையாளத்தை உறுதிப்படுத்தி தமது வாக்காளர் அட்டையைத் தபாலகங்களிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும். - என்றார் அவர். (சி)

# புலி வேடமிட்டுப் பணம் பறித்தனராம் 3 முஸ்லிம்கள் நிட்டம்புவவில் கைது!

கொழும்பு, மே 7

தங்களை விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் என அடையாளப்படுத்தி பலரை அச்சுறுத்திப் பணம் பறித்து வந்தனர் எனக் கூறப்படும் மூன்று முஸ்லிம்கள் நேற்று நித்தம்புவப் பகுதியில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் முன்னதாக அந்தப் பகுதியில் உள்ள வர்த்தகர் ஒருவரிடம் 50 லட்சம் ரூபாவையும் பிறிதொரு வர்த்தகரிடம் 5 லட்சம் ரூபாவையும், மிரட்டிப் பெற்றுக்கொண்டனர் என்றும் ஆரம்பக்கட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்திருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்திருக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட மூன்று முஸ்லிம்களும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டு, கடும் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (சி)

# லயன்ஸ் கழகத்தின் கண்காட்சி

யாழ்ப்பாணம், மே 7

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் நடத்தப்பட்ட தையல், கேக் ஐசிங் ஆகிய பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்ட பயிற்றுநர்களால் தயாரிக்கப்பட்ட பொருள்களின் கண்காட்சி எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணிக்குச் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

கழகத் தலைவர் லயன் இ.ஜெயபாலன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழக 306 பி 1 மாவட்ட உயர்பீட உதவிச் செயலாளர் (வடக்கு) லயன் டாக்டர் வி. தியாகராசாவும் சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட இணைப்பாளர் லயன் ஆர்.இரவீந் திரா, மாவட்டத் தலைவர் (தொழிற் பயிற்சி) லயன் வீ.ஆறுமுகநாதன் ஆகி யோர் கலந்து கொள்வர். (203 - 207)

# தரவை வீதியை புனரமைக்குமாறு தென்மராட்சி மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 7

அண்மைக் காலமாக மக்களின் போக்கு வரத்துப் பாவனை அதிகரித்துள்ள கைதடி - வடக்கு, நீர்வேலி தரவை வீதியை தார் வீதி யாகப் புனரமைக்குமாறு அப்பகுதி மக்கள் தென்மராட்சிப் பிரதேச செயலரைக் கேட்டுள்ள னர்.

கைதடி - கோப்பாய் பால வீதி போக்குவரத் துக்கு மூடப்பட்டதையடுத்து மோட்டார் சைக்கிள், சைக்கிள் ஆகியவற்றில் பயணிப்போர் தரவை வீதியினைப் பயன்படுத்தி வருகின்றனர்.

ஏனைய வாகனங்கள் நாவற்குழி, செம் மணி, முத்திரைச் சந்தி ஊடாகத் தமது பயணத்தினை மேற்கொள்வதால் பயண நேர மும் தூரமும் அதிகரித்துள்ளன.

இவ் வீதியினை தார் வீதியாக மாற்றப் படின் வலிகாமம் - தென்மராட்சிப் பிரதேச வியாபாரிகள் உட்படப் பொதுமக்கள் பயனடை வர் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டி உள்ளனர். (203)

# இந்து நாகரிகக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 7

யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை நடத்தும் இந்து நாகரிகக் கருத்தரங்கு தொடர் 3 இன்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு புதிய கலைப் பீட விரிவுரை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பேராசிரியர் திருமதி கலைவாணி இராமநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில், முதுநிலை விரிவுரையாளர் திருமதி விக்னேஸ்வரி பவநேசன் 'தமிழ் இலக்கியத்தில் பெண்கள்' என்னும் தலைப்பில் கருத்துரை வழங்குவார். (203)

# யாழ்.பிரதேச செயலர் பிரிவில் இறப்பு,பிறப்பு நடமாடும் சேவை

நல்லூர்,மே7

யாழ்.பிரதேச செயலர் பிரிவில் இது வரை பிறப்பு, இறப்பு பதிவுகளை மேற்கொள்ளாதவர்களின் நன்மை கருதி எதிர்வரும் சனிக் கிழமை நடமாடும் சேவை ஒன்று நடத்தப் படவுள்ளது.

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடத்தப் படவுள்ள இந்த நடமாடும் சேவையில், இறப்பு, பிறப்பு பதிவுகளை மேற்கொள்ளாதவர்களைபங்குபற்றி சேவைமூலம் நன்மையடையுமாறு கூறப்பட்டுள்ளது. (203-111)



கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 'ஜிரிசற்' நிறுவனத்தின் அனுசரணை யுடன் நடைபெற்ற உணவுபதனிடல் மற்றும் பெறுமான அதிகரிப்பு சம்பந்தமான பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலர் உரையாற்றுவதை முதலாவது படத்தில் காணலாம். பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்த மாணவி ஒருவருக்கு 'ஜிரிசற்' நிறுவன பிரதம ஆலோசகர் கலாநிதி போல் லூட்ஸ் சான்றிதழ் வழங்குவதை இரண்டாவது படத்திலும் உற்பத்திப் பொருள்களை 'ஜிரிசற்' நிறுவன பிரதம ஆலோசகர் மற்றும் பொறியியலாளர் அன்றியான் கொங் ஆகியோர் பார்வையிடுவதை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்:நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பாடசாலைகள் வலைபந்தாட்டப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்து மாகாண மட்டத்துக்குத் தெரிவு

வலி.வடக்கு,மே7

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற 15 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மாவட்டச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. அப்பாடசாலை மாகாண மட்டப் போட்டியில் கலந்துகொள்ளத் தகுதி பெற்றுள்ளது.

திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் ஓர் அணிக்கு மற்றைய அணி சளைத்தவர்கள் இல்லையென்ற நிலையில் மோதிக்கொண்டார்கள். இரு அணிகளுமே முதல்பாதி ஆட்டத்தில் புள்ளிகளை எதிரணியினர் பெறுவதைத் தடுத்ததுடன் புள்ளிகளையும் மாறிமாறி பெற்றார்கள்.

முதல்பாதி ஆட்ட நிறைவில் யாழ்ப்பாணக் கல்லூரி 6:5 புள்ளிகள் என்ற நிலையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியை விட ஒரு புள்ளியினால் முன்னணியாக நின்றது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மிகவும் வேகமாகவும் விறுவிறுப்பாகவும் விளையாடியதுடன் யாழ்ப்பாணக் கல்லூரியினர் புள்ளிகள் பெறுவதைத் தடுத்து நிறுத்தியதுடன் புள்ளிகளை அதிகரிக்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுக்கொண்டார்கள்.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி தனது முழுமையான திறமையையும் பயன்படுத்திக்கொண்டதைத் தொடர்ந்து 11:05 புள்ளிகள் என்ற அடிப்படையில் முன்னணி பெற்றது.

ஆட்ட நிறைவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி 16:11 என்ற அடிப்படையில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை வெற்றிபெற்று யாழ்.மாவட்டச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

3ஆம் இடத்திற்கான போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தரப் பெண்கள் பாடசாலையும் யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலையும் மோதிக் கொண்டன.

போட்டி முடிவில் பருத்தித்துறை மெதடிஸ் உயர்தரப் பெண்கள் பாடசாலை 13:05 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி கொண்டு 3ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

இப்போட்டியில பத்துப் பாடசாலைகள் கலந்துகொண்டன. (1-86)

## வலிகாமம் தடகளப் போட்டி கலந்துரையாடல் நாளை

வலி.வடக்கு,மே7

வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் இருந்து மாவட்ட மட்டத்தில் இடம்பெறவுள்ள தடகளப் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள பாடசாலைகளின் உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு மானிப்பாயில் அமைந்துள்ள ஆசிரிய வள விருத்தி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

வலய மட்டத்தில் இடம்பெற்ற தடகளப் போட்டிகளில் முதல் இரண்டு இடங்களைப் பெற்ற வீர, வீராங்கனைகள் உள்ள பாடசாலைகளின் உடற்கல்வி ஆசிரியர்கள், பொறுப்பாசிரியர்களுக்கான கலந்துரையாடலைத் தொடர்ந்து மாவட்ட மட்டப் போட்டியின் நிகழ்ச்சி நிரல்கள் மற்றும் வீர, வீராங்கனைகளுக்கான இலக்கங்கள் வழங்குதல் போன்ற நடவடிக்கைகளும் இடம்பெறவுள்ளன.

உரிய பாடசாலைகளைத் தவறாது இக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளும்படி வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் வேண்டியுள்ளார். (1-86)



உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் இடம்பெற்ற பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான போட்டிகளில் கலந்துகொண்டு பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட மல்லாகம் கோட்டைக்காடு ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகத்தின் வீரர், வீராங்கனைகள், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர், மாவட்ட விளையாட்டு அலுவலர் உதவிப் பிரதேச செயலாளர் ஆகியோருடன் காணப்படுகின்றார்கள். *(படம்: நேசன்)*

# கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக் கேடயத்தை கொக்குவில் வி.க. தன்வசமாக்கியது

யாழ்ப்பாணம்,மே7

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் நடத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் அந்தக் கழகமே கே.ஸி.ஸி.ஸி. கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இச்சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் சென்ரல் விளையாட்டுக் கழகமும் கொக்குவில் மத்திய சனசமூக விளையாட்டுக் கழகமும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்ரல் விளையாட்டுக் கழகம் 40 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 232 ஓட்டங்களைப் பெற்றது. சுரேஸ்ராஜ் 52 ஓட்டங்களையும் வினோத்குமார் 50 ஓட்டங்களையும் ஜசிந்தன் 30 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

நிரோஜன் 41 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் றொபேஷன் 27 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் பிரதீபன் 30 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் உமாநாத், வல்லவகுமரன், ஐங்கரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கே.ஸி.ஸி.ஸி அணி 29.2 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 235 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

சசிகரன் ஆட்டமிழக்காது 77 ஓட்டங்களையும் பிரதீபன் 66 ஓட்டங்களையும் ஐங்கரன் ஆட்டமிழக்காது 46 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

விமல்காந்த் 22 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் சக்தியன் 45 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். இப்போட்டி யின் சிறந்த களத்தடுப்பாளராக றஜித் (சென்ரல்) சிறந்த பந்துவீச்சாளராக விமல்காந்த் (சென்ரல்), சிறந்த துடுப்பாட்ட வீரராக சசிகரன் (கே.ஸி.ஸி.ஸி), ஆட்டநாயகனாக பிரதீபன் (கே.ஸி.ஸி.ஸி) தெரிவு செய்யப்பட்டனர்.

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# யாழ்.பல்கலைக்கழக கிரிக்கெட் ஆட்டம்; பற்றிஸியன் சம்பியனாகத் தெரிவு

வலி.வடக்கு,மே7

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு அவை ஈஸ்ட் வெஸ்ட் மாக்கெற்றில் பிறைவேற் நிறுவனத்தின் அனுசரணையுடன் அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே 5ஆவது தடவையாக நடத்திய மட்டுப்படுத்திய ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் யாழ்ப்பாணம் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழகம் சம்பியனாகத் தெரிவுசெய்யப் பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற 40 ஓவர்கள் கொண்ட இறுதிப்போட்டியில் மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகமும், யாழ்ப்பாணம் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் பறீசியன்ஸ் விளையாட்டுக்கழகம் 37 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 220 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

சேர்ச்சில் 40, ஜெயந்திரன் 36, வினோதன் 24 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்கள்.

வினோத் 06 ஓவர்கள் பந்து வீசி 48 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டையும், ஜெகரூபன் 08 ஓவர்கள் பந்துவீசி 27 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டையும் சாத்வீகன், கிசோக்குமார், ஹரிதரன் முறையே 29, 34, 32 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

221 ஓட்டங்கள் வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக்கழகம் 26.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 146 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

ஹரிதரன் 40, ஜெயராஜ் 35, திலகராஜ் 25 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டார்கள்.

சுஜீவன் 05 ஓவர்கள் பந்து வீசி 20 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும் கொலின் 03 ஓவர்கள் பந்துவீசி 17 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் ஜக்சன் 05ஓவர்கள் பந்துவீசி 37 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் நிலோசன், வினோதன், முகுந்தன் முறையே 10, 19, 24 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்கள். (1-86)

# வலி.தெற்கு தடகளப் போட்டியில் உடுவில் ஐக்கிய வி.க. முதலிடம்

வலி.வடக்கு,மே7

வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் இடம்பெற்ற பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற தடகள,பெரு விளையாட்டுப் போட்டிகளில் உடுவில் ஐக்கிய விளையாட்டுக்கழகம் 54 புள்ளிகளைப் பெற்று பிரதேச செயலக சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

2ஆம் இடத்தை 50 புள்ளிகளைப் பெற்ற மல்லாகம் கோட்டைக்காடு ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகம் 3ஆம் இடத்தை 35 புள்ளிகளைப் பெற்று இணுவில் இந்து விளையாட்டுக்கழகம் பெற்றுக்கொண்டன.

மெய்வன்மைப் போட்டியில் ஆண்களுக்கான போட்டியில் 53 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தை இணுவில் இந்து விளையாட்டுக்கழகமும் 2ஆம் இடத்தை 32 புள்ளிகளைப் பெற்று உடுவில் மத்தி விளையாட்டுக்கழகமும் பெற்றுக்கொண்டன.

பெண்கள் பிரிவில் 53 புள்ளிகளைப் பெற்று மல்லாகம் கோட்டைக்காடு ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகம் முதலாம் இடத்தையும் 37 புள்ளிகளைப் பெற்று உடுவில் ஐக்கிய விளையாட்டுக்கழகம் 2ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டது. (1- 86)

# சாவகச்சேரிப் பிரதேச கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் மட்டுவில் மோகனதாஸ் கழகத்துக்குக் கேடயம்

வலி.வடக்கு,மே7

தென்மராட்சி சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற ஆண்களுக்கான 9 பேர் பங்குபற்றும் 10 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகம் பிரதேச செயலக சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகமும் மட்டுவில் ஸ்ரீதாஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் 10 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்ரீதாஸ் விளையாட்டுக்கழகம் 10 ஓவர்கள் நிறைவில் 03 விக்கெட்டுகளை இழந்து 77 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

மோகனதாஸ் விளையாட்டுக்கழகம் 07 ஓட்டங்களினால் ஸ்ரீதாஸ் விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்று பிரதேச செயலக சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது. (1-86)





வேலணை பிரதேச செயலக பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டிகளின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

போட்டிகளில் முதலிடம் பெற்ற துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழக வீரர்கள் பிரதேச செயலர் மு.நந்தகோபாலனிடமிருந்து வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக்கொள்வதை முதலாவது படத்திலும் உதைபந்தாட்டப் போட்டியில் பங்குபற்றிய புங்குடுதீவு சென்.சேவியர், துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் வீரர்களை இரண்டாவது படத்திலும் காணலாம். *(111)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பணி வேலைகள்
## மாலை சந்தை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம் - அல்வாய்

மேற்படி ஆலயத்தில் தெற்கு வாசல் (மண்டபம் - கூரை) திருப்பணி வேலைகள் செய்வதற்கு அனுபவம் வாய்ந்த கட்டட ஒப்பந்தக்காரர்கள் விண்ணப்பிக்கலாம். நேரில் வந்து வேலைகளைப் பார்வையிட்டு கேள்விகளைக் கோரலாம். விண்ணப்பமுடிவு திகதி: 30.05.2008.

தலைவர்,
ஆலய பரிபாலன சபை.

(அ/552721)



## சேகர் மோட்டோஸ்
## SEGAR MOTORS

**அன்பான வாடிக்கையாளர்களே!**

தங்கள் வசதிகருதி
எமது நிறுவனமாகிய
**சேகர் மோட்டோஸ்**
இணை நிறுவனத்தை
17ஆம் இலக்கம் ஸ்ரான்லி வீதியில்
(செம்மா தெருவுக்கு அண்மையில்)
ஆரம்பித்துள்ளோம்.
தங்கள் ஆதரவை நாடும்
**நிர்வாகம்.**

(73793)


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 09 ✱ 10 ✱ 1962



உதிர்வு 11 ✱ 05 ✱ 2005

**வைத்தியகலாநிதி திருமதி வாசுதயாளன்**

திதி:07.05.2008 புதன்கிழமை

பண்பான பாரியாராய்
அன்பான அன்னையாய்
அரவணைத்து அமரரானாய்
கண்மணிபோல் காத்த தெய்வமே!
எம்வீட்டியலைக்கான இரட்சிப்பாயோ!

(73744)

"துவாரகை",
கைதடிமேற்கு.

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்
## பொன்னையா தியாகராஜா



தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா தியாகராஜா 02.05.2008 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - பொன்னம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் அன்னம்மாவின் அன்புக் கணவரும் அப்பாச்சிப்பிள்ளை (அமரர்), நாகம்மா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் தனலட்சுமி, வரலட்சுமி (நோர்வே), நாமகள், கஜேந்திரவரதன் (ஸ்ரீகஜன் மோட்டார்ஸ்), ராஜேந்திரவரதன் (ஜேர்மனி), ரவீந்திரவரதன் (நோர்வே), மோகன்ராஜ் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தாமோதரம்பிள்ளை, சிவபாலன் (நோர்வே), சபாநாதன் (கஜன் மோட்டர்ஸ்), ஈஸ்வரி, பிரபாலினி (ஜேர்மனி), சயந்தி (நோர்வே) , மதிவதனி (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனும் வாசுகி (ஜேர்மனி), தேவகி (நோர்வே), கவிதா (யா/வேம்படி மகளிர் கல்லூரி, ஆசிரியை), சபேஷன் (லண்டன்), சுமதி (கனடா), சுகந் தன் (ஆசிரியர்), தக்ஷாயினி (நோர்வே), மதுஷா (நோர்வே), மயூரன் (யா/இந்துமாணவன்), திலக்ஷி (யா/வேம்படி பாடசாலை மாணவி), சுசாகி (ஜேர்மனி), சுயித்தன் (ஜேர்மனி), நவீனா (நோர்வே), கரீனா (நோர்வே), ஜனனன் (கனடா), உத்திரா (கனடா), ஜெயச்சந்திரன் (ஜேர்மனி), கருணாகரன் (நோர்வே), திலீபன் (யா/கனகரத்தினம் மகாவித்தியாலயம், ஆசிரியர்), சாந்தி (லண்டன்), சிவகுமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும் அச்சுதன் (ஜேர்மனி), கம்ஸன் (நோர்வே), காவியா (நோர்வே), டிதுசன் (மாணவன், மானிப்பாய் சர்வதேச பாடசாலை), றதுஷன், சந்தியா (லண்டன்), ஜெய்டன் (லண்டன்), கருனேஷ் (கனடா) ஆகியோரின் அன்புமிக்க பூட்டனும் அப்பாக்குட்டி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2008) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவடி மானிப்பாய் றோட்,
தாவடி வடக்கு, கொக்குவில்

தகவல்:
குடும்பத்தினர்
222 5646

(73895)

## ஆசிரியமணியின் உருவப்படம் கருணை இல்லத்தில் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், மே7

உரும்பிராயில் இயங்கும், பெற்றோரை இழந்த அனாதைச் சிறுவர்களைப் பராமரித்து வரும் கருணை இல்லத்தின் நிர்வாகியாகவிருந்து அருந்தொண்டாற்றிய காலஞ்சென்ற ஆசிரியமணி அ.பஞ்சாட்சரத்தின் சேவையை நினைவுகூரும் வகையில் அவரது உருவப்படம் மேற்படி இல்லத்தில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 04ஆம் திகதி இடம்பெற்ற இந்த விழாவில் ஆசிரியமணி அ.பஞ்சாட்சரத்தின் சேவையினை நினைவு கூர்ந்து, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் ஆ.சிறீஸ்கந்தமூர்த்தி நயப்புரை வழங்கினார்.

உரும்பிராய் இந்துக்கல்லூரியின் அதிபரும் கருணை இல்லத்தின் தற்போதைய தலைவருமான அ.ஈஸ்வரநாதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் அந்த நிலையத்தில் தங்கிக் கல்வி பயிலும் மாணவிகளது பேச்சு, கவிதை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (203)

## இசைக்கச்சேரி

தென்னிலங்கை சாயிவதரன் இசைக் குழுவினரின் இசைக் கச்சேரி பருத்தித்துறை சாயி மன்றத்தின் நிலையத்தில் இன்று மாலை 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. (203-218)

## ஈச்சம்பழ சீசன் ஆரம்பம்

குடத்தனை , மே 7

தற்பொழுது ஈச்சம்பழச் சீஸன் ஆரம்பமாகியுள்ளது.

ஈச்சமரங்களில் குலைகுலையாக ஈச்சம் பழங்களும் ஈச்சங்காய்களும் காணப்படுகின்றன.

இந்த ஈச்சம்பழங்களை சிறுவர்கள் பறித்து உண்பதுடன் முற்றிய ஈச்சங்காய்களையும் குலையாக வெட்டி வீடுகளுக்கு எடுத்துச் செல்வதையும் அவதானிக்க முடிகிறது. (203-78)

## ஆரம்பப் பிரிவு மாணவருக்கு வடமராட்சியில் பசுப்பால்

வடமராட்சி கல்வி வலயத்திலுள்ள மூன்று பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு வகுப்புகளில் கல்வி கற்கின்ற மாணவர்களுக்கு பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினால் பசுப்பால் வழங்கப்பட்டு வருகின்றது.

பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம், அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம், உடுப்பிட்டி மகளிர்கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்கின்ற மாணவர்களுக்குக்கே பசுப்பால் வழங்கப்பட்டு வருகின்றது.

பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் நடத்தப்படுகின்றன .பாற்சாலையிலிருந்தே இப் பசுப்பால் விநியோகிக்க்கப்பட்டு வருகின்றது. (203-236)

## கூட்டங்கள்

நல்லூர், மே 7

கிராம அபிவிருத்திஉத்தியோகத்தர்கள் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், மகளிர் அபிவிருத்தி நிலைய விவசாய போதனாசிரியர்கள் ஆகியோருக்கான கூட்டம் யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் தவறாது சம்பந்தப்பட்ட அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மாவட்ட கிராம உத்தியோகத்தர் ரி. தியாகமூர்த்தி கேட்டுள்ளார்.

✱ ✱ ✱

யாழ்ப்பாணம், மே7

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்ட கிளையின் பாராட்டுரைக் கூட்டம் இன்று புதன் கிழமை பி.ப. ஒரு மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (203)

## தொழிற்பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கல்

புலம்பெயர்ந்தோருக்கான சர்வதேச நிறுவனமும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும் இணைந்து நடத்திய தொழிற்பயிற்சி நெறிகளை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழும் உபகரணங்களும் வழங் கும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

புனர்வாழ்வு நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் ப.சிவநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் க.மகேஸ்வரன் பிரதம விருந்தினராகவும் உப அலுவலக தலைமை அதிகாரி தே.யூ.ஜெனராஜ் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (203-111)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 14 ✱ 02 ✱ 1943



உதிர்வு 07 ✱ 04 ✱ 2008

**அமரர் சுப்பையா கணேசு**

வாணியாகி எம் நாவை வளர்த்திட்ட தெய்வமாய்
தோணியாகி எம்மைக் கரை ஏற்றிய தோழனாய்
ஏணியாகி எம்மை ஏற்றி வைத்த அப்பாவாய்
பாணியாய் பாசத்தை பகிர்ந்திட்ட தாயாய்
வாழ்ந்திட்ட எம் குலவிளக்கு.....!

இன்று (07.05.2008) புதன்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

டச்சு றோட்,
மானிப்பாய். (73890)

மனைவி,
மக்கள், மருமக்கள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 17 • 05 • 1923



உதிர்வு 19 • 04 • 2007

**அமரர் மாரிமுத்து சின்னத்துரை**

(பிரிட்டிஷ் இராணுவ முன்னாள் அதிகாரி)

ஆண்டு ஒன்று சென்றதையா
எம்மை விட்டு நீர் பிரிந்து
ஆயிரம் உறவுகள் எம்மருகில்
இருந்தாலும் அவை அனைத்தும்
உங்கள் அன்புக்கு ஈடாகுமோ?

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

இராஜபதி, மடத்தடி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(73892)


## COMPUTER EXPRESS
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
#15, Sirambiyadi Lane, Jaffna *Branch* : #167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 021 222 8250 , 0777 222422

**மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2008 80% off**

அனைவருக்கும் புலமைப்பரிசில்

| | | |
|---|---|---|
| Diploma in Computer Science, 4 Months, ~~10,750~~ 2,150 | Honours Diploma in Computer Science, 5 Months, ~~13,000~~ 2,600 | Diploma in Web page Designing, 4 Months, ~~10,750~~ 2,150 |
| Diploma in Graphic Desining, 4 Months, ~~10,750~~ 2,150 | Diploma in Desktop Publishing, 4 Months, ~~10,000~~ 2,000 | Diploma in Hardware Engineering, 3 Months, ~~10,000~~ 2,000 |
| Diploma in Auto CAD, 3 Months, ~~10,000~~ 2,000 | Diploma in Microsoft Office, 3 Months, 1,500 | Accounting Package, 3 Months, ~~10,750~~ 2,150 |

**50% Off ADVANCE COURSES**

| | | |
|---|---|---|
| Diploma in Multimedia | ~~5500~~ | 2750 |
| Diploma in Video Editing | ~~6500~~ | 3250 |

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழ். வரையறுக்கப்படாத கணனிப்பயிற்சி.

வகுப்புக்கள் ஆரம்பம் :
Batch I : 09/05/2008 10AM
Batch II : 10/05/2008 11AM
Batch III : 11/05/2008 11AM
Batch IV: 14/05/2008 10AM


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஊடகங்களுக்கு எதிரான அச்சுறுத்தல்: பக்கச் சார்பற்ற விசாரணை அவசியம்

தமிழர் தேசியத்தின் எழுச்சிக்கு எதிராகப் போர் தொடுத்திருக்கும் இலங்கை ஆட்சிப் பீடம், அதில் ஏற்படும் தனது பின்னடைவுகளை மூடி மறைத்து, அதை ஒட்டிய பிரசாரப் போரில் வெற்றி காண்பதற்காக இங்கு ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கு எதிராகவும் ஒரு யுத்தத்தைத் தொடுத்திருக்கிறது.

இதனைக் கடுமையாக ஆட்சேபித்து கண்டனம் தெரிவித்திருக்கின்றன சர்வதேச, உள்ளூர் ஊடக அமைப்புகள்.

இந்த வரிசையில் ஊடகவியலாளர்களுக்கான சர்வதேச சம்மேளனம் (IJ), ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு (CPJ) போன்ற சர்வதேச அமைப்புகளும், சுதந்திர ஊடக இயக்கமும் இப்போது கடும் அதிருப்தி தெரிவிக்கும் அம்சங்கள் அடங்கிய அறிக்கைகளை வெளியிட்டிருக்கின்றன.

ஏற்கனவே, உலகில் ஊடகப் பணிக்கு மிக ஆபத்தானதும் பயங்கரமானதுமான இடம் இலங்கை - குறிப்பாக யாழ்ப்பாணம் - என சர்வதேச ஊடகப் பிரதிநிதிகள் அடையாளம் கண்டிருக்கின்றனர் என்பது தெரிந்ததே.

இப்போது, தென்னாசியாவில் ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் அதிக அச்சுறுத்தலுக்கு இலக்காகும் நாடு இலங்கை என ஊடகவியலாளர்களுக்கான சர்வதேச சம்மேளனம் அடையாளம் கண்டு அறிவித்திருக்கின்றது.

கடந்த மூன்றாம் திகதி வந்த சர்வதேச ஊடக சுதந்திர தினத்தை ஒட்டி அந்த அமைப்பு விடுத்த நாற்பது பக்க அறிக்கையில் தென்னாசியாவின் ஆறு நாடுகளில் இலங்கையிலேயே ஊடக சுதந்திரம் மிகப் பாரதூரமான அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கின்றது என்ற தகவல் புள்ளி விவர அடிப்படையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

2007 ஆம் ஆண்டின் ஊடக சுதந்திர தினம் தொடக்கம் இற்றைவரை (2007 மே முதல் 2008 ஏப்ரல் வரை) பத்திரிகையாளர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட உடலியல் ரீதியான தீங்கு, அச்சுறுத்தல், மிரட்டிப் பணிய வைத்தல், கடத்தல், தடுத்து வைத்தல், வசைமாரி பொழிதல் போன்ற அழுத்தங்கள், அத்துமீறல்களில் தென்னாசிய நாடுகளில் மிகுந்த சர்ச்சைக்குரிய ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம் ஆகியவற்றையும் விட இலங்கை முதன்மை நிலை பெற்றிருக்கின்றது என்பதை அந்த அமைப்பு புட்டுக் காட்டியிருக்கின்றது.

இந்தக் காலகட்டத்தில் இப்பிரதேசத்தில் உள்ள ஆறு நாடுகளில் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான பாரதூரமான - மோசமான - 214 சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் 90 சம்பவங்கள் இலங்கையில் நிகழ்ந்துள்ளன என்று அந்த அமைப்பு புள்ளிவிவரப் பெறுபேறுகளை வெளியிட்டிருக்கின்றது.

ஊடகவியலாளர்களுக்கு எதிரான யுத்தத்தை நிறுத்துமாறு இலங்கை ஆட்சிப் பீடத்திடம் ஊடகவியலாளர்களுக்கான சர்வதேச சம்மேளனம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றமையை சுட்டிக்காட்டியுள்ள அந்த அமைப்பின் ஆசிய - பசுபிக் பிராந்தியத்துக்கான இயக்குநர் ஜாக்குலின் பாா்க், ஊடகங்கள் தொடர்பாக அரசுக்கும் அரசுத் தலைமைக்கும் உள்ள அதிகாரக் கட்டுப்பாட்டையும் நினைவூட்டியிருக்கின்றார்.

''ஊடகவியலாளர்களின் கருத்துக்களை அரசு நிராகரிக்கலாம். எனினும் வெறுப்புணர்வைத் தூண்டிப் பத்திரிகையாளர்களினதும் ஊடகப் பணியாளர்களினதும் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்த அதற்கு உரிமையில்லை.'' - என்பதை வெளிப்படையாகவே குறிப்பிட்டு, அந்த நிலைமையை அரசுக்கு நினைவூட்டியிருக்கின்றார் அவர்.

பாதுகாப்புப் படையினர் பற்றியும் இராணுவ நடவடிக்கைகள் குறித்தும், படை நடவடிக்கைகளின் பின்னடைவுகள் சம்பந்தமாகவும் தகவல்கள் மற்றும் செய்திகள் வெளியிடும் ஊடகவியலாளர்களை 'தேசத் துரோகிகள்' என்ற சாரப்படக் குற்றம் சுமத்தி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ பகிரங்கமாகக் கருத்து வெளியிட்டிருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

பாதுகாப்புச் செயலாளரின் இக்கருத்துக் குறித்து அரசும், ஜனாதிபதியும் தெளிவுபடுத்த வேண்டும் என்பதை சுதந்திர ஊடக இயக்கத்துடன் சேர்ந்து தானும் வலியுறுத்துவதாக ஊடகவியலாளர்களுக்கான சர்வதேச சம்மேளனம் தெரிவித்திருக்கின்றது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் விடுத்துள்ள இக்கருத்தின் தொடர் விளைவாக ஏற்படக்கூடிய விபரீதங்களுக்கு அவரே பொறுப்பேற்க வேண்டும் என சுதந்திர ஊடக இயக்கம் சுட்டிக்காட்டியிருப்பதும் கவனிக்கத்தக்கது.

ஊடக சுதந்திரம் தொடர்பாக இலங்கை ஆட்சிப் பீடத்துக்கு எதிராக உள்நாட்டு மட்டத்திலும் சர்வதேச ரீதியிலும் கடும் கண்டனங்கள் வெளியாகி வரும் இச்சூழ்நிலையில்-

ஊடகவியலாளர்களுக்கான சர்வதேச சம்மேளனத்தின் பிராந்திய இயக்குநர் ஜாக்குலின் பாா்க் முன்வைத்துள்ள ஒரு முக்கிய கோரிக்கை சம்பந்தப்பட்ட தரப்புகளின் சிந்தனைக்கும் பரிசீலனைக்கும் உரியதாகின்றது.

ஊடக அச்சுறுத்தல் தொடர்பான சகல முறைப்பாடுகளும் பொருத்தமான மத்தியஸ்தர் குழுவினால் ஆராயப்பட வேண்டும் என்பதே அந்தக் கோரிக்கையாகும்.

ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள் போன்றவை தொடர்பான குற்றச்சாட்டு பிரதானமாக அரசுத் தரப்பின் மீது சுமத்தப்படுவதால் -

அரசு சார்பற்ற - சுயாதீனமான - சுதந்திரமான - ஒரு மத்தியஸ்த அமைப்பே இத்தகைய முறைப்பாடுகளை விசாரணை செய்து, உண்மைகளைக் கண்டறிவதோடு சூத்திரதாரிகளையும் அம்பலப்படுத்த வேண்டும்.

சர்வதேச மத்தியஸ்த அமைப்பு ஒன்று இப்பணியை முன்னெடுப்பது இன்னும் சாலப் பொருத்தமானதாக இருக்கும்.

ஊடக சுதந்திரத்தைக் கொடூரமாக மிதிக்கின்றது என இலங்கை அரசுக்கு எதிராகக் கடும் கண்டனங்கள் தெரிவிக்கப்படும் இன்றைய நிலையில், இத்தகைய மத்தியஸ்த அமைப்பின் முன்னால் தன்னை நிறுத்த ஆட்சிப் பீடம் தயாரா?

# வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் 4 ஆயிரத்து 257 புதிய வீடுகள்

## உலக வங்கி மற்றும் நிறுவனங்களின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்டன

கரவெட்டி,மே7

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வடமராட்சி வடக்கு பிரதேசத்தில் முழுமையாகச் சேதமடைந்த 4 ஆயிரத்து 257 வீடுகள் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளன.இத்துடன் 2 ஆயிரத்து 26 பகுதி சேத வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

உலகவங்கி மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதி உதவியுடன் 2 ஆயிரத்து 468 மில்லியன் ரூபா செலவில் இந்த வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன என்று பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

உலகவங்கி தலா 2 லட்சத்து 50 ஆயிரம் செலவில் ஆயிரத்து 878 வீடுகளையும் தேச நிர்மாண அமைச்சு தலா 5 லட்சத்து 50 ஆயிரம் செலவில் 58 வீடுகளையும், 'நிக்கொட்' 2 லட்சத்து 50 ஆயிரம் செலவில் 15 வீடுகளையும் 'யு.என்.டி.பி.' 5 லட்சத்து 50 ஆயிரம் செலவில் 40 வீடுகளையும் 'யு.என்.ஹபிற்றாஸ்' கூட்டு நிதியிடலில் 5 லட்சத்து 60 ஆயிரம் செலவில் 311 வீடுகளையும் அமைத்துள்ளன-

'லயன்ஸ் கழகம்' கூட்டு நிதியிடலில் தலா 5 லட்சம் செலவில் 423 வீடுகளையும் 'லீட்ஸ்' தலா 9 லட்சம் செலவில் 86 வீடுகளையும் 'கெயர்' 9 லட்சம் செலவில் 155 வீடுகளையும் 'வை.எம்.சீ.ஏ.' 8 லட்சம் செலவில் 28 வீடுகளையும் 'போரூட்' 9 லட்சம் செலவில் 173 வீடுகளையும் அமைத்துள்ளன-

'யு.என்.ஹபிற்றாஸ்' 8 லட்சம் செலவில் 197 வீடுகளையும் மெதடிஸ் திருச்சபை 10 லட்சம் செலவில் 45 வீடுகளையும் 'சல்வேசன் ஆமி' 8 லட்சம் செலவில் 30 வீடுகளையும் சர்வோதயம் 8 லட்சம் செலவில் 20 வீடுகளையும் சேவாலங்கா 9 லட்சம் செலவில் 90 வீடுகளையும் அமைத்துள்ளன.

அத்துடன் 'கரித்தாஸ்' 9 லட்சம் செலவில் 360 வீடுகளையும் 'அலயன்ஸ்' 8 லட்சம் செலவில் 76 வீடுகளையும் 'கியூமெடிக்கா' 8 லட்சம் செலவில் 162 வீடுகளையும் 'ஹங்கேரியன்' திருச்சபை 9 லட்சம் செலவில் 35 வீடுகளையும் தென்னிந்திய திருச்சபை 8 லட்சம் செலவில் 40 விடுகளையும் 'கே.பி.என்.ஜி.' 8 லட்சம் செலவில் 30 வீடுகளையும் பெண்கள் அபிவிருத்தி நிறுவனம் 6 லட்சத்து 50 ஆயிரம் செலவில் 5 வீடுகளையும் அமைத் துள்ளன -

அத்துடன் உலகவங்கி தலா ஒரு லட்சம் ரூபா செலவில் ஆயிரத்து 967 பகுதி சேத வீடுகளையும் 'யு.என். டி.பி.' தலா ஒரு லட்சத்து 50 ஆயிரம் செலவில் 59 பகுதி சேத வீடுகளையும் திருத்திக் கொடுத்துள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (203-70)

## துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் கால் இறுதி ஆட்டம் இன்று ஆரம்பம்

மந்திகை,மே7

புத்தாண்டையொட்டி பருத்தித்துறை இலங்கை வங்கிக்கிளை பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் நடத்திவரும் மென்பந்துத் துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் கால் இறுதி ஆட்டங்கள் இன்றுபுதன்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

✱ இன்று பிற்பகல் 3 மணிக்கு - அல்வாய் மைக்கல் வி.க.எதிர் தும்பளை விவேகானந்தா வி.க.

✱ நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்குப் பருத்தித்துறை நிருநாவலூர் வி.க.எதிர் தும்பளை நாவலர் வி.க. (203-218)

## மண்டை தீவிற்குச் செல்லும் வீதியில் ஓடைகளில் இருந்து துள்ளி விழும் மீன்கள்

யாழ்ப்பாணம்,மே7

மண்டைதீவிற்குச் செல்லும் வீதியில், அந்த வீதிக்குக் குறுக்காகச் செல்லும் ஓடைகளில் இருந்து மீன்கள் துள்ளிப் பாய்ந்து வீதியில் விழுவதாக அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில நாள்களாக வீசும் கடும் காற்றின் விளைவாகவே இவ்வாறு மீன்கள் விழுவதாகக் கூறப்படுகிறது.

வீதியில் துள்ளி விழும் மீன்களை அந்த வழியால் செல்பவர்கள் சேகரித்து எடுத்துச் செல்வதைக் காணக் கூடியதாக உள்ளது.

இந்த மீன்கள் மானோடை வீதி கடக்கும் இடத்தில் உள்ள ஏழு கண் பாலத்தில் அதிகமாகப் பாய்கின்றன.

கடல்நீர் வற்றும்மதிய நேரத்தில் வேகமாக மேற்கில் இருந்து கிழக்காகக் கடலை நோக்கிச் செல்லும் நீரோட்டத்துடன் அள்ளுப்பட்டுவரும் இவை பாலத்தில் மோதி பெருமளவில் வீதியில் விழுகின்றன.

சில நிமிட நேரத்தில் ஒரு பெரிய பிளாஸ்ரிக் வாளி நிறையக் கூடிய அளவிற்கு மீன்கள் வீதியில் விழுகின்றன.

ஓர் அடி நீளமான வெள்ளை நிறப் 'பாலை' மீன்களில் சில துள்ளி துடித்து வீதியைக் கடந்து கடல் ஓடையின் அடுத்த பகுதியை அடைந்தும் விடுகின்றன. (203-302)

## சாரதிகளுக்கான நேர்முகத் தேர்வு பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,மே7

யாழ்.பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் இன்று நடைபெற இருந்த சாரதி பதவிக்கு நியமனம் செய்வதற்கான நேர்முகப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என்று பிராந்திய ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (203)

## பருத்தித்துறை - மாலிசந்திப் பகுதிகளில் ஆடுகள் தினமும் விபத்துக்கு உள்ளாகின்றன

### இதனால் பயணிகள் பெரும் சிரமம்

வடமராட்சி, மே7

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதியில், பருத்தித்துறையிலிருந்து - மாலுசந்தி வரையிலான பகுதிகளில் தினமும் ஆடுகள் வாகன விபத்துக்களுக்குள்ளாகிக் காயமடைந்து வருகின்றன.

இப் பகுதிகளில் கட்டாக்காலியாக ஆடுகள் திரிவதனால், அவை பிரதான வீதியில் நடமாடும் போது மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்களில் மோதுண்டு கால்களை இழந்துவிடும் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறு காயமடைந்த நிலையிலும், கால்களை இழந்த நிலையிலும் பல ஆடுகள் சிகிச்சைக்காகப் பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய நிலையத்திற்கு எடுத்துவரப்பட்டு சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

அடிக்கடி இவ்வாறான சம்பவங்கள் ஏற்படுவதால் அவற்றைத் தடுப்பதற்கு ஆடுகளைக் கட்டி வளர்க்குமாறு உரிமையாளரிடம் பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய நிலையத்தினர் வேண்டு கோள்விடுத்துள்ளனர்.

இவ்வாறு வாகனங்களுடன் ஆடுகள் மோதுவதால் பயணிகளும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (203-236)

## சீருடைச் கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,மே7

வடக்கு மாகாண சபையிலுள்ள திணைக்களங்களில் கடமை புரியும் சாரதிகள் மற்றும் காரியாலய சிற்றூழியர்கள் ஆகியோருக்கு வழங்கப்படும் சீருடைக் கொடுப்பனவு கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் அதிகரிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபையினால் அனுப்பப்பட்ட சுற்றுநிருபம் மூலம் இவ் விடயம் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் வருடமொன்றிற்கு சீருடைக் கொடுப்பனவாக ஆயிரத்தி 100 ரூபா வழங்கப்பட்டு வந்தது எனவும் தற்போது ஏற்பட்டுள்ள விலை அதிகரிப்பை கருத்திற் கொண்டு இத்தொகை 2 ஆயிரத்திற்கு மேற்படாதவாறு அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அந்தச் சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-288)

## சிவாஜியின் மணிவிழா நிகழ்வு ஸ்கந்தாவில்

யாழ்ப்பாணம், மே 7

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன் னாள் அதிபர் க.சிவாஜியின் மணிவிழா நிகழ்வு இன்று புதன் கிழமை பி.ப. 12.30 மணிக்கு கல்லூரியின் ஒறேற்றர் சுப்பிரமணியம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் ஆசியுரையினை மூதறிஞர் சிற்பி (சிவசரவணபவன்) நிகழ்த்தவுள்ளார். மணி விழாவை ஒட்டி சிறப்புமலர் வெளியீடும் இடம்பெறவுள்ளது. விழா நிறைவடைந்த பின்னர் பிற்பகல் 3.30 மணியளவில் விழா நாயகன் அவரது இல்லத்துக்கு கல்லூரிச் சமூகத்தால் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார்.

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 26 | 08.05.2008 |
| | வியாழக்கிழமை |
| திதி: திருதியை | மு.ப. 11.12வரை |
| நட்சத்திரம் : | மிருகசீரிடம் |
| | மு.இ. 10.25வரை |
| சுபநேரம் : | 07.24 - 08.54 |
| இராகுகாலம் : | 01.24 - 02.54 |

## சாவகச்சேரி புவேந்தன் பகல் பராமரிப்பு நிலைய மாணவர்களுக்கு உணவு வழங்குவதில் நெருக்கடி

### நிதி போதாமையே இதற்குக் காரணம்

யாழ்ப்பாணம்,மே7

சாவகச்சேரி கண்டுவில் வீதியில் இயங்கும் புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தில் இவ்வருடம் அதிகளவு சிறார்கள் இணைக்கப்பட்டுள்ளதால் சிறார்களுக்கு மதிய உணவு வழங்குவதில் நிலையததினர் பெரும் நிதி நெருக்கடியை எதிர்நோக்குவதாகத் தெரிவித்துள்ளனர்.

கடந்த 13 வருடங்களில் இந்த வருடம் 72 மாணவர்கள் இணைந்து கொண்டுள்ளனர்.

தினமும் ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகைக்கு சிறார்களுக்கு மதிய உணவுக்குரிய பொருள்கள் கொள்வனவு செய்யவேண்டிய நிலை நிலையத்திற்கு ஏற்பட்டுள்ளது.

இவ்வருடம்நிலையத்தில்இணைந்து கொண்ட சிறார்களில் பெரும் எண்ணிக்கையினர் வறுமைக் கோட்டின்கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நிலையத்தில் உள்ள சிறார்களுக்கு மதிய உணவு வழங்கவென அரச திணைக்களமொன்றினால் மாதாந்தம் 4ஆயிரம் ரூபா நிலையத்திற்கு வழங்கப்பட்டு வருவதாகவும் தற்போதைய நிலையில் இது போதியதாக இல்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (203-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளின் கழிவறைகள், பிரேத அறைகள் மற்றும் அலுவலகங்களைச் சுத்திகரிப்பதற்கும் நோயாளர்களைக் காவுதல் மற்றும் நோயாளர் காவு வண்டி உதவியாளர் போன்ற கடமைகளை ஆற்றுவதற்கும் பொருத்தமான சுகாதாரத் தொழிலாளர்கள் ஆள்சேர்ப்பு - 2008

### 01. கடமைகள்

01. வைத்தியசாலைக் கழிவறைகள் மற்றும் பிரேத அறைகளைச் சுத்திகரித்தல்
02. பிரேத அறை மற்றும் பிரேதபரிசோதனை சம்பந்தப்பட்ட கடமைகள்
03. ஆண் நோயாளர்களுடன் நோயாளர் காவு வண்டியில் உதவியாளராகச் செல்லல்
04. வெளிநோயாளர் பிரிவு, சத்திர சிகிச்சைக்கூடம் மற்றும் வாட்டுகளில் நோயாளர்களைக் காவும் கடமைகள்
05. தேவை ஏற்படின் வைத்தியசாலைக் காவற்கடமை மற்றும் துவிச்சக்கர வண்டி ஏவலாளர் கடமைகள்

### 02. தகைமைகள்

01. விண்ணப்பிக்கும் கடமை நிலையம் (பிராந்திய சுகாதாரத் திணைக்களம், வைத்தியசாலை) அமைந்துள்ள மாவட்டத்தில் 5 வருடங்கள் விண்ணப்ப திகதிக்கு முன்னராக தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும்.
02. 8ஆம் வகுப்பில் சித்திபெற்றிருத்தல் வேண்டும் (அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைச் சான்றிதழ் வேண்டப்படும்)
03. வயதெல்லை விண்ணப்பத் திகதியன்று 18 வயதினைப் பூர்த்தி செய்தவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
04. நன்நடத்தை உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

### 03. ஆள்சேர்ப்பு முறை

01. மேற்கூறப்பட்ட கடமையுடன் சம்பந்தப்பட்ட செய்முறைப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையுடன் கூடிய தெரிவு முறையாகும்.
02. எல்லா மாவட்டங்களில் உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப செய்முறைப் பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் அமைய சுகாதாரத் தொழிலாளியாக நியமனம் வழங்கப்படும்.
03. ஏற்கனவே சுகாதாரத் தொண்டராகக் கடமையாற்றியவர்களின் சேவைக்காலமும்புள்ளி வழங்கலின் போது கவனத்தில் கொள்ளப்படும். (2005 செப்ரெம்பரில் ஆகக் குறைந்தது 7 வருடங்கள் தொண்டராகக் கடமை புரிந்திருந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்)
04. ஆரம்ப காலத்தில் அமைய சுகாதாரத் தொழிலாளியாக நியமிக்கப்பட்டு சேவை திருப்திகரமாகவும் சிறப்பாகவும் காணப்படின் மட்டுமே 6 மாதங்களின் பின்னர் உரிய மேற்பார்வை அலுவலரால் சிபார்சு செய்யப்படும் இடத்து சேவை நிரந்தரமாக்கப்படும்.
05. அமைய அடிப்படையில் நியமனம் பெறும் ஒருவருக்கு நாளொன்றுக்கான கொடுப்பனவு பொது நிர்வாகச் சுற்றுநிருபம் 6/2006இன் பிரகாரம் வழங்கப்படும்.

### 03. விண்ணப்பிக்கும் முறை

01. விண்ணப்பங்களை இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப் படிவத்திற்கு அமைவாக A4 அளவிலான (21X29 cm)தாளினை பயன்படுத்தித் தயாரிக்கவும். பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் 21.05.2008ஆம் திகதிக்கு முன்னர் 572/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கான ஆள்சேர்ப்பு விண்ணப்பம்" எனக் குறிப்பிடப் படல் வேண்டும். விண்ணப்பதாரிகளில் 5 வருடங்கள் யாழ்.மாவட்டத்தில் வசித்தவர்கள் தமது விண்ணப்பங்களை யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்கவும். நேரடியாகச் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள் ளப்படமாட்டாது. விண்ணப்பங்களைப் பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்பிவைக்கவும்.

வைத்திய கலாநிதி
எஸ். ...வெற்றிபிள்ளை,
...லாளர்.
சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு,
வடமாகாணம். (சி/552715)

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளின் கழிவறைகள், பிரேதஅறைகள் மற்றும் அலுவலகங்களை சுத்திகரிப்பதற்கும் நோயாளர்களைக் காவுதல் மற்றும் நோயாளர் காவு வண்டி உதவியாளர் போன்ற கடமைகளை ஆற்றுவதற்கும் பொருத்தமான சுகாதாரத் தொழிலாளர்கள் ஆள்சேர்ப்பு - 2008

01. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர்: திரு./திருமதி/செல்வி:-
தமிழில்
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :- ..........................................
02. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :- ..........................................
தமிழில் :- ..........................................
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :- ..........................................
03. தபால் முகவரி :- ..........................................
தமிழில் :- ..........................................
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :- ..........................................
நிரந்தர வதிவிடம் :- ..........................................
04. விண்ணப்பிக்கும் இடம் :- ..........................................
05. பால் : ஆண் (M) பெண் (F)
06. பிறந்த திகதி
15.04.2008ம் திகதியன்று வயது வருடம்: மாதம்: திகதி :
07. அடையாள அட்டை இல.
08. இனம்:
சிங்களவர் ☐ இலங்கைத் தமிழர் ☐ இந்தியத் தமிழர் ☐
முஸ்லிம் ☐ ஏனையவர் ☐
09. (I) நீங்கள் நிரந்தரமாக வதியும் மாவட்டம்:-..........................................
(II) பிரதேச செயலர் பிரிவு:-.............................. கிராமசேவகர் பிரிவு.............
(III)வதியும் கால எல்லை:.............................. தொடக்கம்,......................வரை
10. விண்ணப்பதாரியின் இறுதி உரை
1. இப்பத்திரிகையில் கூறப்பட்ட கடமைகளையும், உயர் அதிகாரிகளினால் பணிக்கப்படும் ஏனைய கடமைகளையும் செய்வதற்கு பூரண சம்மதம் தெரிவித்துக்கொள்கிறேன்.
2. இவ் விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விண்ணப்பங்கள் யாவும் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும், நான் இத்தாள் வெளிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனும் ஒரு பகுதி பூர்த்தி செய்யப்படாமையினாலோ அல்லது எவையேனும் தகவல்கள் பிழையாக சேர்க்கப்பட்டுள்ளதன் விளைவாகவோ ஏற்படக் கூடிய ஏதாவது இழப்பை நான் ஏற்றுக் கொள்வதற்கு உடன்படுகிறேன், மேலும் இதில் உள்ள சகல பிரிவுகளையும் சரியாக பூர்த்திசெய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.
3. என்னால் தரப்பட்ட விடயங்கள் பொய்யானவை எனத் தெரியவந்தால் நியமனத்திற்கு முன்னரான தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்கும் பின்னர் தெரியவந்தால் சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கும் உள்ளாவேன் என்பதை நான் அறிவேன்.
4. இப் பரீட்சை தொடர்பாக நிபந்தனைகள் அனைத்திற்கும் அமைந்தொழுக நான் உடன் படுகிறேன்.

திகதி:.............................. (சி.552715) ..............................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

### அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

வடமராட்சி, மே7

வடமாராட்சி கல்வி வலயத்திலுள்ள துன்னாலை மேற்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் பதவிக்கு பொருத்தமானவர்களிடமிருந்து வலயக்கல்வித்திணைக்களத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை அதிபர் சேவையில் 2-II, III தரங்களில் உள்ளவர்களும் இலங்கை ஆசிரியர் சேவையில் 2-I, 2-II தரங்களில் உள்ளவர்களும் இப் பதவிக்கு விண்ணப்பிக்க முடியுமென அறிவிக்கப் பட்டுள் ளது.

(203-236)

### குடும்பநல சேவையாளர் கௌரவிக்கப்பட்டார்

யாழ்ப்பாணம், மே7

உலக குடும்பநல சேவையாளர் தினத்தையொட்டி சாவகச்சேரி நகர் பிரிவு குடும்பநல சேவையாளர் பிரிவு மக்களால் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

சாவகச்சேரி சிவன் கோயிலிலிருந்து தென்மராட்சி கலைமன்ற மண்டபத்திற்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்.

நிகழ்வில் முன்பள்ளி சிறார்களின் டெங்கு ஒழிப்பு பற்றிய குறுநாடகமும், சுகாதார விழிப் புணர்வுக் கூட்டமும் நடைபெற்றது.

(203-207)

## பாராட்டி வாழ்த்துகிறேன்



### திரு.க.சிவாஜி

(அதிபர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

கத்தும் கடல் முத்தெனவே
புத்திரனாய் வந்தார் - நம் அதிபர்
ஸ்கந்தா அன்னையின் புகழ் பரப்ப
புதுவடிவாய் திகழ்ந்தார்
இரவு பகல் பார்க்காது
நித்தம் பணி செய்தார்
பாரினிலே பண்பான
தலைமகனாய் திகழ்ந்தார்
காவலனே - நீர்
பல்லாண்டு பார் போற்றி வாழ்ந்திடுவீர்...!

(73897) 2007 கலைப்பிரிவு மாணவன் ச. மஜீபன்

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி குருச்சந்திரன் பரிமளாதேவி
அவர்களின் அன்புத் தாய்

### திருமதி மதியாபரணம் யோகம்மா

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் குழாம்.
யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை.
(73896)

## மரண அறிவித்தல்

### கந்தர் விஸ்வலிங்கம்



ஏழாலையைப் பிறப்பிடமாகவும் இணுவில் வீதி, மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட கந்தர் விஸ்வலிங்கம் 02.05.2008 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தர் - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் அமரர் வள்ளிபுரம் (மானிப்பாய்), அமரர் நாகமுத்து (காரைநகர்), அமரர் இராசையா (மானிப்பாய்), அமரர் தங்கம்மா (மானிப்பாய்) ஆகியோரின் சகோதரரும் அமரர் அன்னமுத்து (மானிப்பாய்), நாகம்மா (நீர்வேலி), அமரர் வடிவேலு (கோப்பாய்) ஆகியோரின் மைத்துனரும் நிர்மலாதேவி (ஓய்வுபெற்ற தாதி உத்தியோகத்தர், ஆதார வைத்தியசாலை, மந்திகை- சிவபூமி முதியோர் இல்லம்), சுசிலாதேவி (கொழும்பு), ரஞ்சிதமலர் (பஃறைன்), திலகவதி (தொழில் பயிற்சி ஆசிரியை, அ.மி. பாடசாலை, மானிப்பாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கணேஸ் (மானிப்பாய்) மற்றும் தங்கமலர் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் சிறிய தந்தையும் காலஞ்சென்ற கிருஸ்ணகோபால், காலஞ்சென்ற குணநாதன் மற்றும் இரத்தினசிங்கம் (பஃறைன்), யோகநாதன் (சண்டிலிப்பாய்) ஆகியோரின் மாமனும் வாகீசன் (பஃறைன்), சுரேஸ் (லண்டன்), ரமேஸ் (லண்டன்), சுரேசினி (கொழும்பு), டிணேஸ் (கொழும்பு), தாட்சாயினி (கொழும்பு), தர்மீகன் (பஃறைன்), யர்மிலி (ஜேர்மன்), அஜந்தன் (பஃறைன்), அஜந்தினி (பஃறைன்), காந்தரூபன் (ஜேர்மன்), சுபாசினி (சங்கானை), அஜித்தா (லண்டன்) ஆகியோரின் பேரனும் சுவேதா (ஜேர்மன்), அமுதினி (சங்கானை) ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2008) புதன் கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் இந்து மயானத்திற்கு (பிப்பிலி) எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
நிர்மலாதேவி (மானிப்பாய்) 0094 602217496
சுசிலாதேவி (கொழும்பு) 0094 112520911
ரஞ்சிதமலர் (பஃறைன்) 00973 39869564

இணுவில் வீதி, மானிப்பாய்.
தகவல்: குடும்பத்தினர்.

IIS CITY CAMPUS
Admissions For Academic Year 2008
Date of Closing: 9th May 2008
Date of Selection Exam : 22nd June 2008
IIS CITY CAMPUS
# 200, Sivanpannai Road
(Near Vaitheeswara Junction)
Jaffna
Tel : 021 222 8060
Fax : 021 222 6933

BIT
Bachelor of Information Technology
University of Colombo School of Computing

கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பமானி பட்டக்கல்விக்கான கல்வியாண்டு 2008 இற்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

- விண்ணப்பதாரி 17 வயதிற்கு மேற்பட்டவராகவும் க.பொ.த (உ.த) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.
- இவ்வாண்டு க.பொ.த (உ.த) பரீட்சைக்குத் தோற்றவுள்ளமாணவர்களும் விண்ணப்பிக்கலாம்

BIT கல்விக்குத் தனித்துவம் மிக்க IIS City Campus உடன் இணைந்து கணனிப் பட்டதாரியாகும் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

BITபட்டக் கல்விக்கு கொழும்பு பல்கலைக் கழகத்தினால் சிறப்பு விருது பெற்ற நிறுவனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஒரே நகரத்தில் 10 ஆயிரம் பேர் காவுகொள்ளப்பட்ட பரிதாபம்

# சூறாவளியால் மியன்மாரில் நேற்றுவரை 15,000 பேர் பலி!

## சர்வதேச நிவாரண உதவிகளை வரவேற்பதாக அரச அறிவிப்பு

ரங்கூன், மே 07

இராணுவ ஆட்சிக்கு உட்பட்ட மியன்மாரில், நர்கிஸ் சூறாவளிக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 15 ஆயிரத்தை எட்டியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 10 ஆயிரம் பேர், ஒரேநகரைச் சேர்ந்தவர்களாவர் என மியன்மார் வெளிவிவகார அமைச்சர் நியான் வின், நேற்று தமது தொலைக்காட்சி உரையில் தெரிவித்துள்ளார்.

பின்தங்கிய கிராமப் புறங்களில் சூறாவளி அனர்த்தங்களால் பாரிய சேதங்கள் விளைந்துள்ளன. ஐராவதி பிராந்தியத்திலும், தலைநகரான யன்கோனிலும் (ரங்கூன்) பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளன. சேதங்களை மதிப்பீடு செய்வதில் அரசு மும்முரமாக ஈடுபட்டு வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பூர்வாங்க சேத விவரங்களை ரொய்ட்டர் செய்திச் சேவை வெளியிட்டுள்ளது. விவரம் வருமாறு:-

நர்கிஸ் சூறாவளி அனர்த்தங்களால் ஏறத்தாழ 15 ஆயிரம்பேர் பலியாகியுள்ளனர். 3 ஆயிரம் பேர் காணாமற் போயுள்ளனர். இன்மெல் மாவட்டத்தில் 2 பேரும், மௌலாமயாங் தீவக மாவட்டத்தில் 1, 8345 பேரும் பலியாகியுள்ளனர். இம் மாவட்டத்தில் 2,187 பேர் காணாமற் போயுள்ளனர். ஹிங்யறீதீவக மாவட்டத்தில் 975 பேர் மரணித்துள்ளனர். ஹெகிட்டா தீவ மாவட்டத்தில் 253 பேர் உயிரிழந்துள்ளனர். 10 பேர் காணாமற் போயுள்ளனர்.

டேடா யெல் மாவட்டத்தில் 789 பேர் பலியாகியுள்ளனர். 17 பேர் காணாமற் போயுள்ளனர். பயா போன் மாவட்டத்தில் 5 பேரும், லா புத்தா மாவட்டத்தில் ஆயிரத்துக்கு மேற் பட்டடோரும், போகலே மாவட்டத்தில் ஏறத்தாழ 10 ஆயிரம் பேரும் பலியாகியுள் ளனர்.

தலைநகரான யான்கோன் பிரிவுகளில் 59 பேர்வரை மரணித்துள்ளனர். இவர்களில் 19 பேர் யன்கோன் மாவட்டத்தைச் சேர்ந்த வர்களாவர். 4 பேர் காணாமற் போயுள்ளனர். 40 பேர் குன்ஷான் கோன் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர். இம்மாவட்டத்தில் ஏறத்தாழ 50 பேர் வரை காணாமற் போயுள்ளனர்.

அதேவேளை, வெளிவிவகார அமைச்சர் நியான்வின் தமது தொலைக்காட்சிஉரையில்,

"கடும் மழையோடு கூடிய பலத்த சூறாவளியில் சிக்கி, நதிகளில் 67 படகுகள் மூழ்கியுள்ளன. சில இறங்கு துறைகளும் சேதமடைந்துள்ளன. பேரழிவுகள் விளைந்துள்ள இத்தருணத்தில் அரசு சர்வதேச நிவாரண உதவிகளையும் வரவேற்கின்றது" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கூடாரங்கள், பிளாஷ்ரிக் சீட்டுகள், செங்கற்கள், கூரைத் தகடுகள், ஆணிகள், மருந்து வகைகள் ஆகியவையே அவசரத் தேவைகளாகும் என்றும் அவர் வேண்டுகோளொன்றையும் விடுத்துள்ளார்.


### மணிவிழாக் காணும் அதிபர் பெருமகனை வாழ்த்துகின்றோம்



**திரு க.சிவாஜி**

புகழ்பூத்த ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் அதிபர் வரிசையில் பிரகாசித்த அதிபர் அவர்கள் மணிவிழாக் காணும் சந்தர்ப்பத்தில் அவர் மேன் மேலும் கல்வி உலகில் பிரகாசிக்க எல்லாம் வல்ல துர்க்கையம்பாளை பிராத்தித்து அமைகிறோம்.

சிவத்தமிழ்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
(தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை)



The President and Members Of the Executive Committee of the
JAFFNA SCIENCE ASSOCTATION
have pleasure in inviting
all the well - wishers to the
**PRESIDENTIAL ADDRESS**
on
**"Nutrition and Chronic Diseases"**
by
Prof. (Ms.) V.Arasaratnam
B.Sc, M.Sc, Ph.D.
on
9th May 2008 at 2.45 p.m.
In the
Kaiasapathy Auditorium,
University of Jaffna.
All are welcome


### வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றிநவிலலும்



*சர்வசித்து வருடம் பங்குனி மாதம் 25ம் நாள் 07.04.2008 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்ப விளக்கு*

**அமரர்**

**மனோகராணி இரத்தினசிங்கம்**

எமது அன்புத் தெய்வத்தின் மரணச் செய்திகேட்டு மரணச் சடங்கில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், மக்கள் வங்கி உத்தியோகத்தர்கள் யாழ். செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் மலர் வளையம் சாத்திய அனைவருக்கும் நன்றியை தெரிவிப்பதோடு, தமது அனுதாபத்தினை கடிதம், தந்தி, தொலைபேசியூடாக தெரிவித்த அனைவருக்கும் மற்றும் இழப்பின் துயரால் நிலைதடுமாறி நின்றவேளை முகம் கோணாது தேவையான உதவிபுரிந்த அனைவருக்கும் நன்றியை தெரிவிப் பதோடு அவரை இறுதிவரை காக்க முயற்சித்த யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், தாதிமார்கள் மற்றும் உத்தியோகத் தருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (07.05.2008) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் நிகழவிருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

*56, பலாலி வீதி,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.* (73914) குடும்பத்தினர்.

### சூடானிய விமானத் தாக்குதல்; பள்ளி மாணவர் ஏழுவர் பலி

டர்பூர், மே 07

டர்பூர் பிராந்தியப் பாடசாலையொன்றின் மீது சூடானிய இராணுவம் மேற்கொண்ட வான்வழித் தாக்குதலில் ஏழு சிறார்கள் பலியானார்கள். பாடசாலைக் கட்டடத்தின் ஒரு பகுதி தகர்ந்துவிட்டது என டர்பூரிலுள்ள மனித நேயத் தொண்டு நிறுவனமொன்று குற்றஞ்சாட்டியுள்ளது.

இக்குண்டுத் தாக்குதல் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. அதேதினத்தில் சீஷெக் தூரோ கிராம சந்தை மீதும் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் மேலும் ஆறுபேர் கொல்லப்பட்டனர். 13 பேர் காயமடைந்தனர் என இந்நிறுவன பெண் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, வடக்கு டர்பூர் பகுதியில் மொத்தம் நான்கு வான்வழித் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என உள்ளூர் வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. எனினும், இத் தாக்குதல்கள் தொடர்பாக சூடானிய விமானப்படை மௌனம் சாதித்துள்ளது. சூடானில் வான்வழித் தாக்குதலை மேற்கொள்வதற்கு ஐ.நா. தீர்மானமொன்றின் கீழ் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

சமாதான முன்னெடுப்புகளில் பங்கேற்கும் அமைப்புகளும் அரசும் இவற்றில் போதிய ஈடுபாடு கொள்ளவில்லை என்பதையே தாக்குதல் சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன என மனிதநேயத் தொண்டு நிறுவனம் அதன் கண்டன அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

## மரண அறிவித்தல்கள்

### சிவகுருநாதர் கணேசபிள்ளை (காரைநகர்)



காரைநகர், கருங்காலி, வேரக்குளத்தை பிறப்பிடமாகவும் பொன்னாவளை, களபூமி, காரைநகரை வசிப்பிடமாகவும் இல42/3 A, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுருநாதர் கணேசப்பிள்ளை நேற்று (06.05.2008) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுருநாதர் (பிரபல வர்த்தகர், தங்கொட்டுவ) - சிவக்கொழுந்து தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற கந்தையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், விஜயகலா, விஜயகுமார் (மக்கள் வங்கி, பிரதான வீதி, யாழ்ப்பாணம்), விஜயரூபி (ஆசிரியர், யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம்), சிவகுமார் (ஆசிரியர், விவேகானந்தாக் கல்லூரி, கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அருள்நேசன் (சிவகணேசன் ரெக்ஷ்ரைல்ஸ்), தவராசா (ஆசிரியர், யா/கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலயம்), பத்மினி ஆகியோரின் பாசமிகு மாம னாரும், துவாரா, தேனுஜன், மகிந்தன், விதுர்ஷன், மதுஷா ஆகியோரின் அன்புப் பேரனும், மகாதேவா, கனகசுந்தரம், புஸ்பவதி, மோகனசந்திரன், காலஞ்சென்ற லோகநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.05.2008) வியாழக் கிழமை காலை 9 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*42/3 A, அம்மன் வீதி,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.* (C/552157)

தகவல்:
க.சரஸ்வதி (மனைவி).

### திருமதி செல்லையா சரஸ்வதி



கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா சரஸ்வதி (05.05.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகளும், செல்லையாவின் அன்பு மனைவியும், சண்முகநாதன், இராசலட்சுமி, மங்கையர்க்கரசி, காலஞ்சென்ற சட்டநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலாம்பிகை மற்றும் காலஞ்சென்றவர்களான இராசையா, நவரட்ணம் ஆகியோரின் அன்பு மமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (06.05.2008) செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*2ஆம் குறுக்கு தெரு,*
*கொழும்புத்துறை.* (73915)

தகவல்:
மங்கையர்கரசி
(மகள்).

### சண்முகம் சரவணமுத்து

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் சரவணமுத்து (ஜே.பி) நேற்று (06.05.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சண்முகதாசின் (முன்னாள் வடக்கு - கிழக்கு சுகாதாரப்பணிப்பாளர்) அன்புத் தந்தையும், சுனித்தாவின் மாமனும், அம்பிகா (கனடா), சரவணப்பிரியா, பிரதீபன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2008) புதன் கிழமை பிற்பகல் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை வடக்கு,*
*கொகாமம்.*

தகவல்:
குடும்பத்தினர்.


**Limited Overs Cricket for E.Sabalingam Trophy**

JAFFNA HINDU COLLEGE COLLEGE Vs KOKUVIL HINDU COLLEGE
50 Overs CRICKET

**JAFFNA HINDU COLLEGE**
**VS**
**KOKUVIL HINDU COLLEGE**

10.05.2008 @ Jaffna Hindu College Grounds


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளியியல் பேராசிரியர் ரோனி ராஜரத்தினம் லண்டனில் காலமானார்

யாழ்ப்பாணம்,மே7

யாழ். பல்கலைக்கழகத்தின் முதலாவது பொருளியல் துறைப் பேராசிரியரும், பிரபல பொருளியல் நிபுணருமான ரோனி ராஜரத்தினம் நேற்று லண்டனில் காலமானார்.

அவரது மறைவு குறித்து யாழ். பல்கலைக் கழக துணை வேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் இரங்கச் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார். அச்செய்தியில் குறிப்பிடப் பட்டிருப்பதாவது:-

தமிழர் சமூகம் கண்ட மிகச் சிறந்த புலமையாளர். சமூக விஞ்ஞானி பேராசிரியர் ரோனி ராஜரத்தினம் மறைந்த செய்தி அறிந்து யாழ். பல்கலைக்கழகச் சமூகம் பெரும் துயரம் அடைகின்றது. அவரது ஆத்மா சாந்திக்காக அஞ்சலிக்கிறது.

யாழ். பல்கலைக்கழகத்தின் முதலாவது பொருளியல் துறைப் பேராசிரியராகவும் கலைப்பீடாதிபதியாகவும் விளங்கிய அவர் பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானத்துறையின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றியவர். வணிகவியல்துறைத் தலைவராகவும் விளங்கி புதிய பீடத்தின் விருத்திக்கும் வித்திட்டவர். கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னோடி நிறுவனமான மட்டக்களப்புப் பல்கலைக்கழகக் கல்லூரியின் முதல் தலைவராகவும் அவரது கல்விப்பணி அமைந்திருக்கிறது.

உலகப் புகழ் பெற்ற பொருளியல் வரலாற்றுப் பேராசிரியரான ரோனியின் பெயரோடு இரண்டறக் கலந்த எங்கள் பேராசிரியரின் மறைவு ஈடுசெய்ய முடியாதது - என்று உள்ளது. (அ)

# புதிய எம்.பிக்கள் இருவர் நேற்று சத்தியப்பிரமாணம்

கொழும்பு, மே 7

புதிய எம்.பிக்கள் இருவர் நேற்று சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டார முன்னிலையில் நாடாளுமன்றில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

நாடாளுமன்றம் நேற்றுக்காலை 9.30 மணிக்கு சபாநாயகர் தலைமையில் கூடிய போதே புதிய எம்.பிக்களாக சரணகுப்த குணவர்தன மற்றும் துலிப் பந்துல பெரேரா விஜேயசேகர ஆகிய இருவரும் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டனர்.

கம்பஹா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய நிலையில் அண்மையில் காலமான அநுரா பண்டாரநாயக்கா, அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே ஆகிய் எம்.பிக்களின் இடங்களுக்கே இவர்கள் இருவரும் நியமிக்கப்பட்டனர். (அ)

# முகமாலையில் மீட்கப்பட்ட சடலம் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம்,மே7

முகமாலைப் பகுதியில் படையினரால் மீட்கப்பட்ட ஆண் ஒருவரின் சடலம் திங்கட்கிழமை இரவு யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

கொடிகாமம் பொலீஸாரிடம், இராணுவத்தினரால் ஒப்படைக்கப்பட்ட இச்சடலம் சாவகச்சேரி நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய யாழ். ஆஸ்பத்திரியில் கையளிக்க பட்டுள்ளது.

சடலத்தை இனங்கண்டு உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-1)

# வவுனியாவில் கிளைமோர் மூன்று சிவிலியன்கள் காயம்

வவுனியா மாநகரசபை மைதானத்திற்கு அருகில் நேற்றுமாலை 6.10 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் 3 சிவிலியன்கள் காயமடைந்திருக்கின்றனர் என்று பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்திருக்கின்றனர்.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் பொருத்தி வைக்கப்பட்டிருந்த கிளைமோர் குண்டே வெடிக்க வைக்கப்பட்டது என்றும், காயமடைந்த சிவிலியன்கள் வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (சி)

# கிழக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரைகளில் இதே கருத்தைப் பிரதிபலித்தனர்.

### தமிழ் மக்கள் என்றோ நிராகரித்து விட்டனர்

ஜெயானந்தமூர்த்தி எம்.பி. தனது உரையில் கூறியவை வருமாறு:-

இந்த மாகாணசபைத் தேர்தலைத் தமிழ் மக்கள் என்றோ நிராகரித்து விட்டனர்.

இந்த மாகாணசபைத் தேர்தலில் முதலமைச்சருக்கு எந்தவித அதிகாரமும் கிடையாது. கிழக்கில் வெறும் பொம்மை முதலமைச்சர் ஒருவரை உருவாக்கி அங்கு சிங்களக் குடியேற்றத்தை அரசு மேற்கொள்ளப் போகிறது.

கிழக்கில் கல்லோயத் திட்டம் மூலம் அப்போது சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டது. அப்போது கிழக்கில் புலிகள் இருந்ததால் அத்திட்டம் சரிவர நடைபெறவில்லை.

இப்போது அங்கு புலிகள் இல்லாததால் மீண்டும் அக்குடியேற்றத் திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசு தீர்மானித்துள்ளது.

### கிழக்கில் புலிகள் இல்லை என்று நினைப்பது தவறு

விடுதலைப் புலிகள் கிழக்கில் இல்லை என்று அரசு நினைப்பது தவறு.

புலிகள் எந்த ரூபத்திலும் கிழக்கில் இருப்பார்கள். எந்த வழிகளிலும் புலிகள் கிழக்கிற்கு வருவார்கள்.

இந்தத் தேர்தலில் அரசு படுதோல்வியை எதிர்கொள்ளும். தமிழ் மக்கள் நிச்சயம் அரசை எதிர்த்தே வாக்களிக்கத் தீர்மானித்துள்ளனர். அரசை எதிர்த்து வாக்களிக்குமாறு நாம் மக்களிடம் கேட்டுள்ளோம். மக்கள் அதை ஏற்றுள்ளனர்.

இத்தேர்தலில்வெற்றிபெற்று அதன்ஊடாக அபிவிருத்தியின் பெயரில் சர்வதேச உதவிகளைப் பெற்று, அந்த உதவிகளை புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தி, புலிகளைத் தோற்கடிக்கலாம் என்று அரசு கனவு காண்கின்றது. அந்தக் கனவு நிஜத்தில் நடக்காது.

அரசியல் ரீதியாக அரசு எந்தவிதமான தந்திரங்களைச் செய்தாலும் யுத்தத்தின் மூலம் புலிகளைத் தோற்கடிக்க முடியாது. ஒருபோதும் போர் மூலம் புலிகளைத் தோற்கடிக்கவே முடியாது.

வன்னியை யுத்தம் மூலம் கைப்பற்ற அரசு முயற்சித்தால் அரசு பெரும் தோல்வியையும் பாரிய இழப்பையும் சந்திக்கும்.

அதேபோல் கிழக்குத் தேர்தல் மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்று அரசு எண்ணினால் அதுவும் முட்டாள் தனம்தான்.

### அரசு கயிறு விடுகிறது

இந்தத் தேர்தலின் ஊடாக கிழக்கில் தமிழ் - முஸ்லிம்கள் இடையே இனப்பிரச்சினையை உருவாக்கவும் அரசு திட்டமிட்டுள்ளது. இந்தச் சதித்திட்டத்தில் நமது மக்கள் சிக்கமாட்டார்கள்.

கிழக்கில் தமிழ் - முஸ்லிம் மக்கள் மிகவும் ஒற்றுமையுடன் வாழ்கின்றனர். அவர்களைப் பிரிக்கும் நோக்கில் முஸ்லிம் ஒருவரை முதலமைச்சராக்குவோம் என்று முஸ்லிம்களிடமும், தமிழர் ஒருவரை முதலமைச்சராக்வோம் என்று தமிழர்களிடமும் அரசு கயிறு விடுகிறது.

எது எப்படி இருப்பினும் இத்தேர்தலில் அரசு படுதோல்வியடைவது நிச்சயம் - என்றார் அவர். (அ-சி)

# ஜே.வி.பி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்களின் வாக்குகளைக் கோரி சிங்களவர்களோ, முஸ்லிம்களோ திருக்கோயில் பகுதிக்குள் நுழையக் கூடாதெனத் தாக்குதலை மேற்கொண்ட பிள்ளையான் குழுவினர் தெரிவித்தனர் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கலப்பதி கூறியுள்ளார்.

இதேவேளை இந்த தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜே.வி.பி.நேற்று கிழக்கில் ஆர்ப்பாட்ட பேரணியொன்றை நடத்தியதாக மற்றொரு தகவல் தெரிவித்தது. (உ)

# நாடாளுமன்றை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி விடுத்திருக்கின்றார்.

ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் நாடாளுமன்றம் இடைநிறுத்தப்படுமாயின், அச்சமயம் நாடாளுமன்றத்தின் பரிசீலனைக்காக நிலுவையில் இருக்கும் பிரேரணைகள் மற்றும் நாடாளுமன்ற நிலையியல் குழுக்கள் போன்றவை எல்லாம் செயலிழந்து போகும்.

அத்தகைய நிலுவையில் இருக்கும் பிரேரணைகளை மீண்டும் கவனிக்க வேண்டுமானால் திரும்பவும் புதிதாக அப்பிரேரணைகள் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

அதேபோன்று, செயலிழந்த நிலையியல் குழுக்களும் புதிதாக நாடாளுமன்றம் கூடும் போது புதியவையாக அமைக்கப் பட வேண்டும்.

### பிரச்சினைக்குரிய நிலையியல் குழுக்கள் செயலிழந்தன

இந்த வாய்ப்பைத் தமது அரசுக்கு சாதகமாகப் பயன்படுத்துவதற்காகவே இவ்வாறு நாடாளுமன்றத்தை ஜனாதிபதி இடைநிறுத்தி உத்தரவிட்டிருக்கின்றார் என்று கருதப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் அரசுத் தரப்பு வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ, புலிகளுக்கு பணம் கொடுத்து, உடன்பாடு கண்டு அதனைப் பயன்படுத்தி குறுக்கு வழியில் தேர்தலில் வெற்றி பெற்றாரா என்பது குறித்து ஆராய நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் எனக் கோரும் பிரேரணை ஒன்று காலஞ்சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீபதி சூரியராய்ச்சியினால் சமர்ப்பிக்கப்பட்டு நிலுவையில் உள்ளது.

நாடாளுமன்றம் இடைநிறுத்தப்பட்டதால் இந்தப் பிரேரணை இப்போது செயலிழந்து போய்விட்டது.

அதுபோல, அரசுத் தரப்பின் அதிருப்திக் குழு எம்.பியான விஜேயதாஸ ராஜபக்ஷ தலைமையிலான பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக் குழு மற்றும் பொதுக் கணக்குகள் தொடர்பான நாடாளுமன்றக் குழு போன்றவையும் இந்நடவடிக்கையால் செயலிழந்துள்ளன.

இதனால், இந்த நிலையியல் குழுக்களைப் புதிதாக - புதிய உறுப்பினர்களை நியமித்து - ஸ்தாபிப்பதற்கு அரசுத் தரப்புக்கு வாய்ப்புக் கிட்டியிருக்கின்றது.

ஏற்கனவே இருந்த மேற்படி நிலையியல் குழுக்கள் இரண்டும் அரசுத் தலைமையின் விருப்புக்கு ஏற்றபடி செயற்படவில்லை என்று கூறப்படுகின்றது.

இந்த நிலையியல் குழுக்கள் இரண்டும் பல அமைச்சுகளில் இடம்பெற்ற மோசடிகளைக் கண்டுபிடித்து அம்பலப்படுத்தியமையுடன் சம்பந்தப்பட்ட விவகாரங்களுக்குப் பொறுப்பான அரசியல் தலைவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கவும் தூண்டி வந்தன.

இக்குழுக்களினால் குற்றவாளிகளாக - அல்லது தவறிழைத்தவர்களாக - அடையாளம் காணப்பட்ட பலர் இப்போது அரசுப் பக்கம் இருப்பதால், இக்குழுக்களின் செயற்பாடு அரசுத் தலைமைக்கு தலையிடி கொடுப்பதாக இருந்து வந்தது.

இப்போது நாடாளுமன்றம் இடைநிறுத்தப்பட்டதால் இக்குழுக்கள் செயலிழந்து விட்டன.

இனி, அரசு தனக்கு விரும்பிய புதியவர்களை - வேறு எம்.பிக்களை - இந்த நிலையியல் குழுக்களுக்கு நாடாளுமன்றம் புதிதாகக் கூடிய பின்னர் நியமிக்க முடியும். அதன்மூலம் அக்குழுக்களைத் தமது விருப்புக்கு இசைவாகச் செயற்படுத்த முடியும் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (உ)

# இலங்கைக்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும் அவர் சென்னார்.

இதேவேளை, மியன்மாரில் ஏற்பட்டுள்ள சூறாவளியைத் தொடர்ந்து மியன்மார் அரசு தனது கையிருப்பில் எவ்வளவு அரிசி உள்ளது, அது தற்போதைய நிலையில் போதுமானதா போன்ற முக்கிய விடயங்களைக் கவனத்தில் எடுக்கவேண்டியுள்ளதால் இலங்கைக்கான - உத்தேச - ஐம்பதாயிரம் தொன் அரிசி விநியோகம் தாமதமடையலாம் என மியன்மார் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

''இயற்கை அனர்த்தத்தினால் எமது அரிசி சேமிப்பிற்கு ஏற்பட்ட பாதிப்பு குறித்து ஆராய்ந்த பின்னர் பொருத்தமான முடிவையெடுப்போம்.'' - என அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மியன்மாரில் அரிசி உற்பத்தி செய்யப்படும் பகுதிகளே சூறாவளியினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரசு தனது உள்ளூர் அரிசி உற்பத்தியும், விநியோகமும் குறைவடைந்தமையைத் தொடர்ந்து அரிசிக்காக மியன்மாரையே பெரிதும் நம்பியுள்ளது என்பது கவனிக்கத்தக்கது. (உ)

# பிலியந்தல....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாயக்க நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணையை சமர்ப்பித்து, விவாதத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் இதனைக் கூறினார்.

கடந்த ஒருமாத காலத்தில் படையினரும் புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களின்போது முப்படையினரிலும் பொலிஸாரிலும் 121 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 745 பேர் காயமடைந்துள்ளனர்.

அதேபோல் பொதுமக்களில் 56 பேர் மரணமடைந்தும் 145 பேர் காயமடைந்தும் உள்ளனர்.

நாம் அனைவரும் இந்த நாட்டில் சுதந்திரமாக வாழவே விரும்புகிறோம். ஆனால், புலிகளின் பயங்கரவாதம் எமது இந்த விருப்பத்திற்குத் தடையாக உள்ளது.

இந்தப் பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதற்கான தேவை எமக்குண்டு.

இன்று கிழக்கில் பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்துக் கட்டுவதற்காக கிழக்கு மக்கள் கிழக்கு மாகாண சபைத் தேர்தலை ஆயுதமாகப் பயன்படுத்தத் தீர்மானித்து விட்டனர்.

இவ்வாறான பல்வேறு வழிகளில் புலிகளின் பயங்கரவாதத்தை அரசு தோற்கடிக்கும். - என்றார் அவர்.

Microsoft Certified Systems Engineer
பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில்
★ குறுகியகால நிறைவான வகுப்புக்கள்
★ Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
★ Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
★ வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம் 07.05.2008 08.00 a.m.
மாணவர் விருப்பிற்கு மேலதிக வகுப்பு நேரங்கள்
பதிவு செய்வோருக்கு விசேட சலுகைகள்
விபரங்கள் நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP

நீங்களும் கணனி பட்டதாரியாகலாம்
O/L / A/L தடையல்ல
இலங்கை பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் உடையது
யாழிலேயே கற்கும் வசதி
பகுதிநேர வெளிவாரி கற்கைநெறி
18.05.2007 அன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடந்த பட்டமளிப்பு வைபவத்தின் போது சிற ந் விருது பெற்ற நிறுவனம்

விண்ணப்பபடிவங்களிற்கும் பதிவுகளுக்கும்
0?-05-2008 முன் நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP

Diploma in Computerized Accounting
சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள Accounting Software களினூடாக Network ஊடான கணக்குபதிவு முறைகளுடன்......
ACCPAC + Quick Books Premier + MYOB
Course Contents
❖ Manual Accounting
❖ Financial Accounting
❖ Cost Accounting
❖ Taxation (Including VAT)
❖ Stock Control
❖ Bank Reconciliation
❖ Budgeting
வகுப்புக்கள் ஆரம்பம்.
Batch I: 08/05/2008 9AM
Batch II: 10/05/2008 2PM
Batch III: 11/05/2008 2PM
Batch IV: 13/05/2008 9AM
COMPUTER EXPRESS
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
#15, Sirambiyadi Lane, Jaffna
Branch : #167, Kasthuriyar Rd, Jaffna.
PHONE : 021-222 8250 , 0777 222 422

PHYSICS
A/L 2009
LIGHT
Tue, Thu - 6.30-7.30 a.m.
A/L 2010
Mechanics
Tue, Thu - 4.00-5.00p.m.
By.K.Selvan
NAVALAR
JAFFNA

SHAMROCK
J/EACHCHAMODDAI
O/L
DAY CLASS
ENGLISH MEDIUM
Gr.6 TO II
SHAMROCK

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.05.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.